The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | ஜூலை 1918. | இலக்கம் ௭.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புகள்.

இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் அசனசாலையில் கூடியிருந்தவர்கள் மேல் இறங்கி வந்த அற்புத வரலாற்றைப்பற்றி, அப்போஸ்தலர் நடபடி II-ம் அதிகாரம் 2-வது, 3-வது வசனங்களில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது: "சடுதியில் ஓர் பெருங்காற்று அடித்தாற்போல் வானத்தினின்று ஓா ஒலி உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீட்டை முழுதும் நிரப்பினதுந் தவிர, அக்கினிமயமாயப் பிரிந்த நாவுகள் அவர்களுக்குத் தோன்றி, அவர்களில் ஒவ்வொருவர் மேலேயும் தங்கி நின்றன." ஓர் பெருங்காற்றைப்போல தொனித்த ஒலி அல்லது தொனி இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனுக்குக் குறிப்பாயிராமல், அவர் செய்தருளிய அற்புத செயல்களுக்குக் குறிப்பாயிருக்கின்றதாமே. அஃதெவ்வாறெனில் காற்றானது விரைவாய்ச் செல்லத்தக்கதென்று அறியாதவர்களில்லை. அப்படியானால், பெருங்காற்று அல்லது புயல் இன்னு மதிக வேகமாய்ச் செல்லுமென்று சொலலவும் வேண்டுமோ? சிறிது நேரத்திற்குள் அது எத்தனையோ நூறு மைல்கள் தூரம் செல்லக்கூடியதாயிருக்கின்றது. இப்படியே, இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனும் சத்திய வேதமாகிய கத்தோலிக்கு வேதம் இவ்வுலகில் எல்லோருக்கும் வியப்பை யுண்டாக்கக்கூடிய அவ்வளவு விரைவாய் அப்போஸ்தலர்களைக் கொண்டு பரவும்படிச் செய்தார். எவ்வளவு விரைவாய்சத்தியவேதம்பரவிற்றென்றால், திருச்சபை உண்டாகி இன்னு முந்நூறு வருஷங்களாவதற்குள்ளாகவே, உலகத்திலிருந்தவர்களுக்குள் பாதிபேர் அதைத் தழுவலாயினர். இதைப்பற்றி அக்காலத்திலிருந்த அஞ்ஞானிகளுக்கு தெர்த்துலியனென்பவர் எழுதியுள்ளதாவது: "கிறீஸ்துவர்களான நாங்கள் நேற்று உண்டானவர்கள். ஆயினும், நாங்கள் உங்களுடைய நாடு நகரங்களிலும், உங்களுடைய ஊர் பட்டணங்களிலும், கோட்டை கொத்தளங்களிலும், நில புலங்களிலும், நீதி ஸ்தலங்களிலும், கலாசாலைகளிலும், நிறைந்துளளோம். எங்களால் உங்களுக்கு

விடப்பட்டிருக்கிற விடங்கள் உங்களுடைய ஆலயங்களை யன்றி வேறெவையுமாகா" என்பதாம். வேகமுள்ள புயல் காற்றைப்போல், தூரமான ஊர் நாடுகளிலெல்லாம் சத்திய வேதம் துரிதமாய்ப் பரவிற்றென்பதற்கு மேற்சொன்னவர் எழுதியுள்ளதானது ஓர் சிறந்த அத்தாட்சியாயிருக்கின்றதன்றோ ?

* * *

புயலானது அதிக வேகமுள்ள தென்பதும், அதிக பலமுள்ள தென்பதும் நமக்குத் தெரிந்த விஷயம். அது அதிவேகமா யடிக்கையில் அதன் பலத்தை எதிர்த்து நிற்கமுடியாத எத்தனையோ மரக்கிளைகள் முறிந்து விழுகின்றன ; எத்தனையோ விருட்சங்கள் வேரோடு பிடுங்கப்பட்டு கீழே சாய்கின்றன ; எத்தனையோ வீடுகள் தகர்ந்து விழுகின்றன ; எத்தனையோ கட்டிடங்களின கூரைகள் தூக்கி எறியப்படுகின்றன ; ஆழ்நத சமுத்திரமும் மேலுங்கீழுமாகி அல்லோல கல்லோலமான நிலைமைக்குள்ளாகின்றது. இப்படியே, சத்தியவேதமும் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனுடைய வல்லமையினால் மேற்சொன்னபடி அதிவேகமாய பரவி வருகையில அதன் வழியில் அதற்கிடைஞ்சலாயும், இடையூறாயும் இருந்து அதை எதிர்த்தவாக ளெல்லோரும அதை வெல்லமுடியாமல் முறியடிக்கப்பட்டார்கள். யூதாகளும அஞ்ஞானிகளும சத்திய வேதம பரவாதபடி தஙகளாலான பிரயாசையெல்லாம பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலர்களையும் கிறீஸ்துவர்களையும் இடைவிடாமல இம்சித்தார்கள். இவர்களைச் சிறைச்சாலையி லடைத்தார்கள், சித்திரவதை செய்தார்கள், சரசாக்கினைக்குளளாக்கினாகள், இவர்களுடைய சொத்து சுதந்தரஙகளையும சூறையாடினாகள். மேலும, இவர்கள் ஏறககுறைய முந்நூறு வருஷமளவாக உரோமைச் சக்கரவாத்திகளால அநுபவித்துவநத வாதனைகளும வேதனைகளுமநாவால சொலலுந்தரமலல. இச்சக்கரவாத்திகளால எத்தனையோ ஆயிரக்கணக்கான பேர்கள் தஙகள் இரத்தத்தைச் சிந்தினார்கள். ஆயினும, இஸபிரீத்துசாந்துவாகிய சர்வேசுரனுடைய அறபுத வலலமையினால சத்தியவேதம் அவாக ளெலலோரையு மேறகொண்டு நாளுக்குநாள் விருத்தியாகி சிறந்து விளங்கிற்று. "வேத சாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை உற்பத்தியாக்கும் வித்தாயிருந்தது" என்பது எவ்வளவோ உண்மை!

* * *

ஓர் பெருங் காற்றைப்போல் வானத்தினின்று வந்த சப்தம் திடீரென்று தொனித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா ? இதனால் நாம் அறிந்துகொள்ள வேண்டியது யாதெனில், இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் தம்முடைய அருட்பிரசாதங்களை அதிக தாராளமாக வலிய தந்தருளுகிறாரென்றும், அதனால் பல தருணங்களில மகா பெரிய பாவிகளும் ஒரு நொடிப்பொழுதில் மனந்திரும்பி பெரிய புண்ணியவானகளாகிறார்களென்றுமேயாம். இதைப்பற்றி பாப்பானவரும் அர்ச்சியசிஷ்டவருமாகிய பெரிய கிரகோரியார் பின்வருமாறு கூறியுள்ளார் :—"ஆ! இஸ்பிரீத்துசாந்துவானவர் எவ்வளவோ வல்லமையுள்ளவர். அவர் சித்தங்கொள்ளுவதையும் ஓர் ஆத்துமத்துக்குப் படிப்பிக்க அவருககுக் காலமும் நேரமுந் தேவையில்லை. அவர் ஓர் ஆத்துமத்தைத் தொட்ட மாத்திரததில் அது தனக்கவசியமானதைக் கற்றுக்கொள்ளும்படி செய்கிறார். அவருக்குத தொடுவதும் கற்பிப்பதும் ஒன்றேயாம். அதேதெனெனில், அவர் ஒருவனுடைய இருதயததில ஞான வெளிசசமுண்டாகச் செயதவுடனே, அவன் தான் முன் கொண்டிருநத ஆசைப் பறறுதலகளையெல்லாம் விட்டுவிட்டு, வேறு மனிதனாகிவிடுகிறான்." ஆகையால் நாம் பாவத்தை விலக்கி புண்ணியத்தைச் செய்ய இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனுடைய உதவியை இரந்து கேட்டுககொள்ள வேணடுமென்று இதனால நமக்குத தெரியவருகிறது.

* * *

ஒலியானது அவர்கள் உட்கார்ந்திருந்த வீட்டை முழுதும் நிரப்பினது என்பதினால, திருச்சபையானது வறுமை சிறுமைககுளளாகாதபடி செலவச செருக்குள்ளதா யிருக்கிறதென்று—அதாவது வரப்பிரசாதஙகள நிறைநத பாக்கியத்தையுடையதா யிருககின்றதென்று அறிநதுகொள்ளுவோமாக. ஆம, கத்தோலிக்குத் திருசசபையில் ஆததுமங்களின்

இரட்சணியத்துக்கான சாதனங்களுக்கும், உபகரணங்களுக்கும், அனுகூலங்களுக்கும் எட்டுணையுங் குறைவில்லை. தேவத்திரவிய அனுமானங்களினாலும், அனுதினப் பூசைப்பலிகளினாலும், புத்தி பிரசங்கங்களினாலும், ஞானப் புத்தகங்களினாலும், பரிபூரண, அபூரண பலன்களினாலும், மோட்சவாசிகளுடைய பேறு பலன்களினாலும், அவர்களுடைய வேண்டுதல் மன்றாட்டுகளினாலும், திருச்சபையின் சாங்கிய சடங்குகளினாலும், அதன் வேண்டுதல்களினாலும் நம் ஒவ்வொருவருடைய ஆத்தும இரட்சணியத்துக்கும் வரப்பிரசாதங்களின்மேல் வரப்பிரசாதங்கள் வந்து குவிகின்றன. ஆனபடியால், இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் நம்மேல் பொழிகிற வரப்பிரசாதங்களுக்காக அவருக்கு நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருப்பதுமன்றி, அவருடைய வரப்பிரசாதங்களுடன் ஏகோபித்து ஞானப் பிரயோசனபடையவும் முயலுவோமாக.

*
* *

அக்கினிமயமான பிரிவு நாவுகள் ஒவ்வொருவர் மேலேயுந் தங்கிநின்றனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரிவு நாவுகள் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் நமக்குக் கொடுத்தருளுகிற பற்பல வரப்பிரசாதங்களுக் கடையாளமாம். இதை நமக்கு விவரித்துக்காட்டும்படியாகவே, அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக் கெழுதிய முதல் நிருபம் XII-ம் அதிகாரம் 8, 9, 10, 11-ம் வசனங்களில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—"இஸ்பிரீத்துவினால் ஒருவனுக்கு ஞானத்தைப் பேச வரமும், வேறொருவனுக்கு அந்த ஒரே இஸ்பிரீத்துவினால் கலைக்கியானத்தைப் பேச வரமும், வேறே ஒருவனுக்கு அந்த இஸ்பிரீத்துசாந்துவினால்தானே விசுவாச வரமும், வேறே ஒருவனுக்கு அந்த ஒரே இஸ்பிரீத்துவினால் ஆரோக்கியத்தைக் கொடுக்கும் வரமும், வேறே ஒருவனுக்கு அற்புதங்களைச் செய்ய வரமும், வேறே ஒருவனுக்குத் தீர்க்கதரிசன வரமும், வேறே ஒருவனுக்குப் புத்தி பகுத்தறிய வரமும், வேறே ஒருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேச வரமும், வேறே ஒருவனுக்கு வியாக்கியானஞ் சொல்ல வரமும் கொடுக்கப் படுகின்றன. இவையெல்லாம் தமதிஷ்டப்படிக்கு அவனவனுக்குப் பகுத்துக்கொண்டுவருகிற ஒரே இஸ்பிரீத்துவினால் செய்யப்படுகின்றன."

*
* *

அக்கினிமயமாய்ப் பிரிந்த நாவுகள்... ......தங்கி நின்றன என்பதில் தங்கி நின்றன என்னும் வார்த்தைகள் நமக்குப் படிப்பிப்பதியாதெனில், நமதாண்டவர் தம் அப்போஸ்தலரை நோக்கி "நான் பிதாவை மன்றாடுவேன்; அவரோ என்றென்றைக்கும் உங்களோடுகூட இருக்கத்தக்கதாக வேறேதேற்றுகிறவரை உங்களுக்குத் தந்தருளுவார்" (அரு XIV,16). என்று திருவுளம்பற்றினபடி இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் உலக முடிவு பரியந்தம் திருச்சபையில் அப்போஸ்தலர்களோடிருக்கிறார் என்பதேயாம். ஆகையால் நாம் எவ்வளவோ பாக்கியம் பெற்றவர்கள்!! இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் நம்மைத் தேற்றவும், நமக்கு வேண்டிய அருட்பிரசாதங்களைத் தரவும், நம்மைக் காத்து நடத்தவும் திருச்சபையோடிருக்கிறார்.

*
* *

அசனசாலையிற் கூடியிருந்தவர்கள் மேல் தங்கி நின்ற பிரிந்த நாவுகள் அக்கினிமயமாய்த்தோன்றின. அக்கினியானது பல தருணங்களில் சர்வேசுரனுக்கு அடையாளமாயிருந்திருப்பதை வேத புத்தகத்தில் காண்கிறோம். பழய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறபடி சர்வேசுரன் தம்மைப் பல முறைகளில் அக்கினி மூலமாய் அறிவிக்கத் திருவுளங்கனிந்திருக்கிறார். மோயீசனுக்குத் தீப்பற்றி யெரிந்த புதரினாலும், இஸ்ராயேலருக்கு அக்கினிமயமான ஸ்தம்பத்தினாலும் தம்முடைய பிரசன்னத்தைத் தெரியச் செய்திருக்கிறார். ஆனால், இஸ்பிரீததுசாந்துவான சர்வேசுரன் அக்கினி நாக்கு ரூபமாய் இறங்கிவந்தது எதற்கடையாளமாகு மென்றால், பூர்வம் இடி இடிக்க, மின்னல் மின்ன, பத்துக்கற்பனைகள் சீனா மலையின்மேல் கொடுக்கப்பட்டதற் கடையாளமாகவாம். ஆயினும் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் தம்முடைய புதிய ஏற்பாட்டை இப்போது இடியோடும் மின்னலோடுங் கொடாமல் அக்கினிநாக்கு ரூபமாய் எழுந்தருளி வந்து கொடுத்ததற்குக் காரணம் யாதெனில், புதிய ஏற்பாடு பழய ஏற்பாட்டைப்போல் அச்சமும் நடுக்கமுமுள்ளதாயிராமல் நேச

மும் அன்புமுள்ளதா யிருக்கின்றதினாலே யாம். ஆனபடியால், அப்போஸ்தலரும் "நீங்கள் திரும்பப் பயப்படும்படியான அடிமைத் தனத்தின் இஸ்பிரீத்துவைப் பெற்றவர்களல்ல, அப்பா! பிதாவே! என்று கூப்பிடும்படிக்குப் புத்திர சுவீகாரத்தின் இஸ்பிரீத்துவைப் பெற்றிருக்கிறீர்கள்" (உரோமர் VIII 15) என்கிறார்.

THE HISTORY OF ST. MONICA.
அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All rights reserved.)

முதல் அதிகாரம்.

அர்ச். மோனிக்கம்மாளின் குடும்ப விசேஷங்கள்—அவள் ஜனனமும் பாலப் பருவத்தின் பிரதம வருஷங்களும்—அவளது விவாகமும்.

(இரட்சண்யம் 332—353.)

(முன் தொடர்ச்சி.)

பெரியாரைத் துணைக் கொள் என்கிறபடி தன் பாட்டியாரைத் துணையாகக்கொண்டு, அவளிடம் அநேகமணிநேரம் உட்கார்ந்துகொண்டு காலங் கழிப்பாள். விருத்தாப்பிய வயதை யடைந்த அப்பாட்டியார் தளரா விசுவாசம் கொண்டவளாகையால், எவரும் அவளைச் சங்கிப்பார்கள். அப்புண்ணியவதி வேதசாட்சிகளின் காலத்தில் ஜீவித்தவளாகையால், அவர்கள் சத்தியத்திற்காகப் பட்ட பாட்டையும், எவ்வித துன்பத்திலும் காட்டிய தைரியத்தையும், கல்லான மனதும் கரையத் தக்க விதமாய் எடுத்துச்சொல்லும்போது, பத்தியுள்ள சிறுமியானவள் ஆனந்தத்தில் மூழ்கித் திட விசுவாசங்கொண்டு ஞான வைராக்கியத்தினால் தூண்டப்படுவாள். அர்ச். மோனிக்கம்மாள் அர்ச். அகுஸ்தீன் என்பவரைச் சகல வித்த்திலும் உத்தம வழியில் நடத்திவரும்படி, கர்த்தர் அவளுக்குப் புத்தி சாமர்த்தியத்தையுமன்றி அதிலும் விசேஷித்ததான மாறாத மதுர குணத்தையும், அருமைவாய்ந்தஸ்திர புத்தியையும் அருள்புரிந்திருந்தார். ஆழமாய் வேரூன்றியிருக்கும் ஆலமரமானது எப்படி எவ்வித புசல்காற்றிற்கும் அஞ்சாமல் தைரியமாய் நிற்குமோ, அப்படியே அவளிடத்தில் விளங்கிவந்த மனச்சமாதானமானது, மாற்றமும் திரிபுமின்றி ஒரே நிலையாயிருந்தது. அம் மனோ சமாதானத்தைக் கெடுக்க எதினாலும் முடியாது. சுபாவத்திலே அவள் தைரியசாலி என்றாலும், என்ன கஷ்டம் வந்தபோதிலும் அதைப் பொறுமையோடு சகித்துவருவாள். அவள் இருதயமானது அன்பின் ஆலயமாயிருந்தபடியால் அத்தியந்த ஆவலுடன் பிறரை நேசிக்கவும், அந்நேச வுணர்ச்சியைத் தர்மக்கிரியைகளினால் காட்டவும் வருந்துவாள். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமென்றால், மலைகள், குன்றுகள் முதலியவரட்சியான நிலங்களினிடையில், நீர் வளம், நிலவளம் பொருந்திய பூமியின்மீது பச்சைப் பசேரான பயிரின் கதிர்கள் செழிப்புடன் ஓங்கி வளர்ந்து, பார மிகுதியால் முடிசாய்ந்து தொங்கும் காட்சியானது, கண்ணுக்கு மெத்தவும் மனோ ரம்மியத்தை யாருக்கும் உண்டாக்குவதுபோல் அவளுடைய சுகுண லட்சணங்களும் எல்லோருக்கும் மனோரம்மியத்தை யுண்டாக்கினது.

அர்ச்சியசிஷ்டவர்களைப்பற்றி பேசும்போது முதலாய், அவர்களுடைய அங்கவிலட்சணங்கள் எப்பேர்ப்பட்டவை என்று அறிய நமக்குந் தெரியாமல் ஆசை பிறப்பதுண்டு. அப்படியே இப்புஸ்தகத்தை வாசிப்பவர்களும் அவைகளை அறிய ஆசைகொள்வார்கள் அல்லவா? அப்படிப்பட்ட ஆசையைச் சரிவரத் திருப்திசெய்வது கஷ்டமே. நமக்குத் தெரிந்தமட்டும் அவள் கொஞ்சம் நெட்டையென்றும், அவள் வதனம் சந்திரனுக்கொத்த சுந்தர ரூபம் கொண்டதென்றும் தோன்றுகின்றது. அவளுக்குப் பதினெட்டு இருபது பிராயம் நடக்கும்போது, அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல் அவள் கொண்டிருந்த பக்தியும், அடக்க ஒடுக்கமும், தேவசிநேகமும், பிறசிநேகமும் அவள் திவ்ய வதனத்தைச் சோதிப் பிரபையோடு துலங்கச் செய்ததால், அவளுடைய சரித்திரத்திற்கு ஆதாரமாயிருக்கும் பூர்வீக சாதனங்களுள் ஒன்றை எழுதியவர், அம்முக விலட்சணத்தை விவரமாய் எடுத்துக்காட்ட தம்மால் இயலாதென்று ஒரே கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்.

பரிசுத்த வேதாகமமானது, அர்ச்சியசிஷ்டவர்களுடைய மனோ சமாதானத்தைப்பற்றிச்

சொல்லியிருக்கும் வாக்கியத்தையே, நாம் அவர்களுடைய அழகு சவுந்தரிய விஷயமாயும் சொல்லவேண்டி யிருக்கிறது—Exsuperat omnem sensum—அவர்களுடைய இலட்சணம் யாவும் வேறுவிதத்தி லடங்கியிருக்கின்றது. அவை நம்மால் கிரகிக்குந் தன்மையுடையனவன்று. தாவீதிராசா தமது சங்கீதாகமத்தில் சொல்லுவதுபோல், நீதிமான்களின் அழகு தேவாலயங்களின் சிறப்பலங்காரத்திற்கு ஒத்திருக்கின்றது. எனெனில், தேவாலயங்களின் அழகு சவுந்தரியத்தைப் போலவே, நீதிமான்களின் அழகு சவுந்தரியமும் ஆத்துமத்தைத் தேவ பாரிசமாய் உயர்த்துகின்றதாமே.

அர்ச். மோனிக்கம்மாளிடம் விளங்கிவந்த அத்தியந்த அடக்க ஒடுக்கத்தினால், அவளுடைய சுயரூபலாவர்ணியம் கண்டோர் மனதைக் கவரத்தகும் விதமாய்ச் சோபித்தது. அவ்வழகு சவுந்தரியத்தை, அவளுடைய பெற்றோர் கண்டு அவள்மட்டில் பெருமைகொண்டிருந்ததுமன்றி, சாதாரணமாய்க் கிறீஸ்துவ தாய் தந்தையர் முதலாய்ச் செய்கிறதுபோல், அதனை இன்னம் அதிகரிக்கப் பேராவல் கொண்டிருந்தார்கள். விலையுயர்ந்ததும், அத்தர், புனுகு, சவ்வாது முதலிய பரிமள மேற்றியதுமான சரிகைச் சேலைகளை அவர்கள் அவளுக்குக் கொடுத்து அணிந்துகொள்ளச்சொன்னால், ஒரே பிடிவாதமாய் மாட்டேனென்று வினய மரியாதையோடு மறுப்பாள். நிஷ்க்கபடம், அடக்க ஒடுக்கம் ஆகிய இவைகளின் மதிப் பின்னதென்றும், செல்வாக்கான வஸ்திராபரணங்களை அணிந்துகொண்டு இருதய ஒறுத்தலையும் சுயப்பரித்தியாகத்தையும் அநுஷ்டிப்பது எவ்வளவு கஷ்டமென்றும், ஆப்பிரிக்கா கண்டத்தில் பிரதாபித்து விளங்கிய வேதபாரகர்களிடமிருந்தும், தெர்த்துலியான், அர்ச். சிப்ரியானிடமிருந்தும் அவள் அறிந்திருந்தாள். ஆதலால் காம்பீரமுள்ள ஆடைகளுக்குப் பதிலாக, தொங்கலாவது கரையாவது இல்லாத சாதாரணமான தும்பைப்பூ போன்ற வெண்புடவையைத் தளரவிட்டுக் கட்டிக்கொள்வாள். அக்காலத்தில் கிறீஸ்துவ வாலிபப்பெண்கள் அணிந்துகொள்வது இவ்வித ஆடைதான். பூர்வீக சுரங்கங்களில் எழுதியிருக்கும் எண்ணிறந்த சித்திரப் படங்களாலும் இதைக் கண்டுகொள்ளலாம்.

என்றைக்காவது விடியற்காலத்தில் மப்பு மந்தாரமின்றிச் சூரியன் இளம்பிரகாசத்தோடு பிரகாசிப்பதைப் பார்த்தால், அத்தினத்தை யாவருக்கும் மனோகரமுண்டாக்கும் நல்ல நாளென்று நாம் சொல்வதுபோல், அர்ச். மோனிக்கம்மாளின் பாலியப்பருவ விசேஷத்தைக் கண்டபிறகு, பின்னுக்கு அவளுடைய சீவியம் இத்தன்மையாயிருக்குமென்று யூகித்தறியக்கூடியதாமே. அவள் கன்னிப்பருவம் அடைந்ததுதான் தாமதம். அதற்குள் ஒருவன் அவளை விவாகத்திற்குக் கோரினன். அவளுடைய பெற்றோர்களும் அக்கோரிக்கைக்கு இசைந்தார்கள். இவ்விளங் கன்னிகை, ஒருவேளை அர்ச். அகினேசம்மாள், அர்ச். ஆகத்தம்மாளைப்போல, துறவற அந்தஸ்தில் சேர்வாள், அல்லது இல்லற அந்தஸ்தி லிருந்தாலும் "மனசுக்கேற்ற மாங்கிலியம்" என்னும் முதுமொழிப்போல், இவளுக்குப் பாக்கியமான மாங்கிலியம் கிடைத்திருக்குமென்றாவது நாம் நினைத்திருப்போம். ஆனால் அப்படிப்பட்ட பரிசுத்த புண்ணியவதியானவள், எவ்வித பொருத்தமுமில்லாத ஒரு அக்கியானிக்குத் தேவ தீர்மானத்தின்படி வாழ்க்கைப்பட்டாள். இது எப்படியென்று நம்மால் கண்டுபிடிக்கக் கூடவில்லை.

இவளுடைய மணவாளனாகிய பத்திரீஸியூஸ் என்பவன், தகாஸ்தே என்னும் நாட்டில் பிறந்தவன். இவனுடைய விருத்தாந்தத்தை நாம் கிஞ்சித்து ஆராய்ந்தறிவது அவசியம். அவன் குடும்பம் இன்னதென்றும், அவன் பெற்றோர் இன்னாரென்றும், அவன் பிறந்தது இன்ன காலத்திலென்றும் எந்த ஆசிரியனாலும் கண்டுபிடிக்க இயலாமல் போயிற்று. அவன் அர்ச். மோனிக்கம்மாள் உதித்த பட்டவர்த்தனக் குடும்பத்திலும் விசேஷித்த ஒரு பழமையான பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவனென்பது உண்மை. அர்ச். மோனிக்கம்மாள் என்ன காரணத்தைப்பற்றி பத்திரீஸியூஸுக்கு விவாகஞ் செய்து கொடுக்கப்பட்டாளென்று திட்டமாய்ச் சொல்ல வகையறியாத புராதன ஆசிரியர்கள், அவனுடைய உயர்ந்த வங்கிஷத்தைப்பற்றித்தான் அவளை அவனுக்குக் கட்டிக்கொடுத்திருப்பார்களென்று நிதானத்தில் யூகிக்கிறார்கள். எனெனில், பத்திரீஸியூஸ் என்பவன் செல்வாக்குள்ளவனல்ல. மேலும் தகாஸ்தேயில் அவன் வகித்திருந்த உத்தியோகமானது அநேக சரித்திரக்காரர்கள் சொல்லியிருப்பதுபோல், அவ்வளவு பெருமைவாய்ந்ததுமன்று. அவன் ஒரு முனிசிப்பல் அதிகாரி. எவனொருவனுக்கு 26 ஏக்கர் நிலமுண்டோ அன்னவனுக்கு இவ்வுத்தியோகம் கிடைக்கும். சிறு நாடுகளில் சாதாரணமான இவ்

வுத்தியோகம் இங்கு அதிக பொறுப்புள்ளதாயும் கஷ்டமுள்ளதாயுமிருந்தது. ஏனெனில், முனிசிப்பல் அதிகாரிகள் தீர்வையனைத்தையும் கட்டாயம் சேகரம் செய்து சர்க்காருக்குக் கட்டவேண்டுமென்றும், அப்படி யாருடைய தீர்வையாவது சேகரமாகாதபட்சத்தில், குறைவுபட்ட தொகையைத் தங்கள் வருமானத்திலிருந்து சரிக்கட்ட வேண்டுமென்றும் ஒரு சட்டமிருந்தது. ஆனதால் தீர்வைகளைச் சரியாய்க் கட்ட இயலாத நிர்ப்பாக்கியமுள்ள ஜனங்களை எப்படித்தான் இம்சிப்பது என்று ஒரு பக்கத்தில் பரிதாபங் கொண்டும், இன்னொரு பக்கத்தில் தீர்வைப் பணம் ஒரு காசுங் குறையாமல் வரவே வேண்டுமென்று எவ்வித நியாயத்திற்கும் இணங்காமல் ஒரே பிடியாயிருக்கும் சர்க்காரைப்பற்றி பயங் கொண்டும், சீ இதென்ன, இப்படிப்பட்ட அதிகார உத்தியோகமும் வேண்டாம், இதன் பெருமையும் வேண்டாமென்று தப்பித்துக்கொள்ள யாவரும் பிரயாசைப்படுவார்கள். பத்திரீஷியூஸ் என்பவன் ஒரு புராதனப் பிரபு சிகாமணி வமிசத்திற் சேர்ந்தவன். தன் காலத்திலிருந்த மற்ற அதிகாரிகளைப்போலவே இவனும் தீர்வைப் பணம் கொடுக்காதவர்களுக்கெல்லாம் தன் காசு தண்டம் கொடுத்து கொடுத்து நஷ்டமடைந்திருக்க வேண்டுமென்றும், அல்லது நஷ்டத்திற் கேதுவாயிருந்திருக்க வேண்டுமென்றும் தோன்றுகிறது.

அவனுடைய குண லட்சணத்தைப்பற்றியோவெனில், அவனுடைய ஐஸ்வரியத்தைவிட அவன் இருதயம் தாராளமுள்ளதாயிருந்ததென்று அர்ச். அகுஸ்தீன் நிச்சயமாய்ச் சொல்லுகிறார். சரித்திரம் போகப்போக அது உண்மைதானென்று தெரியவரும். ஆனால் ஆரம்பத்தில் அவ்விலட்சணங்கள் அவனாத்துமத்தின் அந்தகாரத்தில் அமிழ்ந்திக்கிடந்தமையால், அவைகளின் குறிப்புகளை முதலாய்க் காண்பது அருமையாயிருந்தது. ஆனால் தேய்க்கத்தேய்க்க ஜொலிப் படையும் கல்லைப்போல், மோனிக்கம்மாளின் முயற்சியால் அவ்விலட்சணங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் வெளிக்குத் தோன்றின. துவக்கத்தில் அச்சற்குண இலட்சணங்கள், தம் பிரதாபத்தைக் காட்டாமல், அதிக வெட்கக்கேடான துர்க் குணங்களால் கட்டப்பட்டிருந்தன. முதலாவது, அவன் ஒரு அஞ்ஞானி. நாலாம் யுகத்தின் மத்தியில், நீஸ் சங்கம் முடிவான கொஞ்ச காலத்துக்குப் பிறகு, அர்ச். அத்தனாஷியுஸ், அர்ச். வனத்து சின்னப்பர், அர்ச். அந்தோனியார், இவர்கள் சீவித்திருந்த காலத்தில், அவன் அப்படி அஞ்ஞானியாயிருந்ததைப் பார்த்தால், அவன் தன் ஆத்தும காரியங்களில் விசனத்துக்குரிய அசட்டைத்தனங் கொண்டவனென்றாவது, அல்லது இரகசியத்தில் தான் செய்துவந்த பாவக் குருட்டாட்டத்தில் அமிழ்ந்திக் கிடந்தவனென்றாவது தோன்றுகிறது. உண்மையாகவே அவன் ஆத்துமத்தில் இவ்வித அசட்டைத்தனமும் குருட்டாட்டமும் குடிகொண்டிருந்தன. வேத விஷயங்களில் அவன் கொண்டிருந்த அசட்டைத்தனம் எத்தன்மைத்தாயிருந்ததென்றால், அவ்வசட்டைத்தனத்தினின்று அவன் தெளிவடையப் பதினெட்டு வருஷகாலம் ஒரு அர்ச்சியசிஷ்டவளோடு ஒன்றித்து வாழவேண்டியிருந்தது.

இன்னது பாவம், இன்னது புண்ணியம் என்று பகுத்தறியக்கூடுமான உணர்ச்சி அவனிடம் அவ்வளவு சொற்பமாயிருந்ததால், தன் பெருமை சிலாக்கியத்திற்குத் திருப்தி தரும்படியாக, ஆயிரமாயிரம்விசைத் தன் மகனைக் கேட்டின் பாதையில் விட்டான். இத்தோடுகூட அவனுக்கிருந்தது துஷ்டகுணம். இதை இக்காலத்தில் சரியாய்க் கண்டுபிடிப்பது கூடாமை. அர்ச். மோனிக்கம்மாளின் உறவினரும் மித்திரிகளுமான பிரபுகுல சீமாட்டிகளுடைய புருஷர்கள் மகா கொடிய நெஞ்சுள்ள துஷ்டர்களாகையால், அவர்கள் அப்பெருமாட்டிகளைப் படுத்துகிற வாதைகளைச் சாதாரணமாய் அவர்களின் முகத்திலேயே கண்டுகொள்ளக்கூடும். ஆதலால் அம்மாதர்கள் அவ்விஷயமாய் ஒருவருக்கொருவர் விசாரித்துக்கொள்வதுகிடையாது. இருந்தாலும் மோனிக்கம்மாளைப் பத்ரீஷியூஸுக்குப் பாணிக்கிரஹணம் செய்துகொடுக்கப் போகிறார்களென்று அவர்கள் கேள்விப்பட்டவுடன், பதைத்துத் துடித்து ஐயோ பாவம்! சுத்த சுசீலியாகிய மோனிக்கம்மாள் அந்த நிஷ்டூரனிடம் என்ன பாடுபடப்போகிறாளோவென்று தங்கள் கைகளை முறித்துக்கொண்டு பரிதபித்தார்கள். ஏனென்றால் பத்ரீஷியூஸ் என்பவன் புலிக்குச் சரியான துஷ்டகுணமுள்ளவனென்றும், யாவரிலும் கொடிய பாதகனென்றும் பெயர்பெற்றிருந்தான்.

அர்ச். மோனிக்கம்மாள் இச்சமுசார வாழ்க்கையில் பானஞ்செய்யவேண்டிக் கடவுளால் நியமிக்கப்பட்ட கசப்பான பானத்தில், இது ஒரு பகுதிமாத்திரமே. அவளுக்குத் தக்க புருஷ

ஞயிருந்து அவளைப் பாக்கியவதியாக்கவும், அவளோடு ஒன்றித்து வாழ்ந்து அப்பாக்கியத்தைச் சுகிக்கவும் கூடிய மனிதனுனவன்; அவளது இருதயத்தில் பூரணமாய் வியாபித்திருந்த கிறீஸ்துவ நேசம் இத்தன்மையதென்று அறிந்திருக்க வேண்டியிருந்தது. அப்படிப்பட்டவன் சுசீலம், சாவதானம், நல்லொழுக்கம், கண்ணியம் முதலிய சற்குண லட்சணங்களையும், விவாகம் என்னும் ஸ்திரீ புருஷாள் ஐக்கியத்தை அர்ச்சித்துக் கனப்படுத்திக் காப்பாற்றும் மற்றும் அரிய லட்சணங்களையும், பூஷணமாகக் கொண்ட சற்பாத்திரனுயிருந்திருக்கவேண்டியது. ஆனுல் பத்ரீஷியூஸ் என்பவனேவெனில் தாறுமாறுன சீவியம் சீவித்து வெட்கத்துக்குரிய பாவதோஷங்களைப் புரிந்துவந்தவன். ஏதோ விவாகதகிற்குப் பிறகாவது தன் நடத்தையைச் சீர்திருத்தியிருப்பானென்று சிலர் நினைப்பார்களாக்கும். ஆனுல் அந்தோ! பரிதாபம்! அப்படியன்று. நாய்வாலை எவ்வளவுதான் நிமிர்த்தினுலும் அது நேராகாதென்பதுபோல், மணமுடித்த மறுநாளே அப்பாவதோஷங்களைத் திரும்பக் கட்டிக்கொள்ளத் தொடங்கினுன்.

இவ்விருவருக்கும் பிராய விஷயத்திலும் பொருத்தங் கிடையாது. மோனிக்கம்மாளுக்கு இருபத்திரண்டு வயசு. பத்திரீஷியூஸ் நாற்பத்து நாலுவயதிற்குமேற்பட்டவன். இவளுக்குலபித்த நிர்ப்பாக்கிய நிலைமை யெப்படிப்பட்டதென்று இதனை வாசிப்பவர்கள் சரியாய்க் கண்டுபிடிக்கக் கூடுமாயிருக்கும். இப்படியாக இருவருக்கும் பிராய விஷயத்தில் இருக்கும் வித்தியாசத்தையும், இதற்கு மேலாய்க் கருததிலும் விருப்பத்திலும், நடத்தையிலும், மன நாட்டத்திலும், வேத விஷயத்திலும் இருக்கும் வித்தியாசத்தையும் நாம் உன்னிப் பார்க்குமிடத்து, இவர்களுடைய விவாகத்தில் பாக்கியமுண்டென்று நினைக்கச் சற்ருவது இடமில்லை. இதற்கு மாருக, இவ்வளவு நிர்ப்பாக்கியமும் இவ்விவாகத்தினுல் உண்டானதினிமித்தம் தான் ஆருத் துயரங்கொண்டு, எவ்வித மன ஆறுதலும் இருதய சந்துஷ்டியுமின்றித் துக்க சாகரத்தில் அமிழ்ந்திகிடக்க வேண்டியிருக்குமென்றும், அதன் காரணமாய் தனக்கு அநேக ஆபத்துகளும், சில சமயம் சோதனைகளும் உண்டாகுமென்றும் முன் குறிப்பாய் அவளுக்குத் தெரியவந்தன. ஆகவே, அவள் தன் கஷ்ட நிர்ப்பந்தங்களைப் பொறுமையுடன் சகித்து தனக்குண்டான சோதனைகளை ஜெயிக்கவும், தன்னைச் சூழ்ந்திருக்கும் காரிருளைச் சோதிப் பிரகாசமாய் மாற்ற அத்தியந்த வீரத்துவமான புண்ணிய முயற்சிகளை அநுசரிக்கவும் வேண்டியிருந்தன.

நாம் இச்சரிதையை வாசிக்க வாசிக்க, மோனிக்கம்மாளின் பெற்ருேர் இப்படிப்பட்ட விவாகத்திற்கு உடன்பட்டதெப்படியென்று நமக்குத் தெரியாமலே ஓர் சந்தேகம் பிறக்கும். இவ்வுலக சீவியமானது தன்னிலேதானே கசப்பு நிறைந்ததா யிருக்கிறபடியால், அதனை வேண்டுமென்று இன்னம் அதிகமாய்க் கசப்புப் படுத்துவது நியாயமல்ல. மேலும் மனித சுபாவம் அவ்வளவு நொய்மையுள்ளதா யிருக்கிறபடியால், அது மிஞ்சிய கஷ்ட நிர்ப்பந்தங்களை வீரத்துவத்துடன் சகித்து வெற்றி பெறுமென்று எதிர்பார்ப்பது அவிவேகம். இதுவுமன்றி அவளுடைய பெற்ருேர் பக்தி ஒழுக்கம் நிறைந்த கிறீஸ்துவர்களாயிருந்தும் விவாகத்தின் பொருத்தங்கள் இன்னின்னவையென்று அறியாதிருந்தார்களென்று சொல்லமுடியாது. தர்ம ஒழுக்கத்தைப் பூஷணமாய்ப் பூண்டிருந்த இச்சிறு பெண்ணைப் பாழுங்கிணற்றில் தள்ளுவதுபோல், ஒரு காமாதுரனுக்குக் கட்டிக்கொடுத்தது எதற்குச் சமானமென்றுல், அவளுடைய சிரசில் மோசா முடியைச் சூட்டுவதற்குப் பதிலாய் முண்முடியைச் சூட்டுவதுபோலும், அவளுடைய அந்தியகாலம் வரையிலும் கஷ்டப்படும்படி வாலிபத்திலேயே கைவிட்டுவிட்டது போலுமாகும்.

இதற்குச் சமானமான தண்டனையைப் பூர்வீக ஜனங்கள் விதிப்பதுண்டு. அதெப்படியெனில், ஒரு குற்றவாளியைத் தண்டிக்கவேண்டியதானுல் அவனை உயிர்வாங்காமலே ஒரு பிரேதத்துடனே சேர்த்துக் கட்டி, கட்டு மாருமலே அவனையும் அப்பிரேதத்தையும் ஒரு இருளடர்ந்த சிறைக்கூடத்தில் போட்டுச் சாறறிவிடுவதாம்.

நமது அர்ச்சியசிஷ்டவர்களின் பெற்ருேர் பின்வருவனவற்றை யோசித்திருந்தால் அதாவது "ஐயோ! நாமங்கள் கிறீஸ்துவர்கள், பத்ரீஷியூஸ் ஒரு அஞ்ஞானியாயிறறே; துர்மார்க்க சீவியத்தில் நாள் கழித்துவருகிறவனுயிறறே; பிராயப் பொருத்தம், குணப் பொருததம் மற்றும் எவ்வித பொருத்தமுமில்லாத இவனுக்கு நமது மகளைக் கொடுத்தால் அவளுடைய வாழ்வு கொஞ்சங்கூட பாக்கியமுள்ள வாழ்வாயிராதே; ஐயோ! நமது அருமையான புத்திரியை, நமது செல்வ மகளை, நமது நேசமுள்ள குமாரத்தியை, இவ

னுக்குத்தானா கொடுப்ப" தென்று கொஞ்சம் சிந்தித்திருப்பார்களேயானால், இப்படிப்பட்ட சம்பந்தத்திற்குச சற்றும் இசைந்தேயிருக்கமாட்டார்கள். "ஆய்ந்தோய்ந்து பாராதான் காரியம்தான் சாந் துயரந்தரும்" என்பதை மறந்து பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு மணமுடிக்க வேண்டுவதானால், மதப் பொருத்தம் குணப் பொருத்தம், பிராயப் பொருத்தம் முதலியவைகளைச் சரியாய் விசாரித்து யோசிக்காமல், ஆத்திரமாய் எதையும் தீர்மானம் செய்துவிடுவார்கள். உலக சீவியத்திற் கடுத்த வேறெந்த விஷயங்களிலும் அவர்கள் இப்படிப்பட்ட அசட்டைத்தனம் காட்டுவதே கிடையாது. பத்ரீஷியுஸ் என்பவன் அஞ்ஞானி; ஒரு மதக்கொள்கையுமின்றி அலங்கோலையான சீவியம சீவித்துவந்தவன். ஆனால் மோனிக்கம்மாள் அவனை மனந்திருப்பிச் சத்திய மார்க்கத்தில் சேர்த்துவிடுவாள். அவன் புலிக்கொத்த கோபாவேசங்கொண்ட கொடியன். இருந்தாலும் அவன் உள்ளம் நல்லது. அவன் நடத்தை சீர்குலைந்த நடத்தை. ஆனால் அவன் இன்னும் வாலிபனல்ல. சந்தேகமின்றி நாள் போகப்போக நல்வழிக்குத் திரும்பிவிடுவான் என்று இப்படியாகத் தங்கள் மனதைச் சமாதானப்படுத்திக்கொள்ளுவார்கள். இதுமாத்திரமல்ல, அவன் ஒரு குலமகன். புராதனமும ராஜபக்தியும் நேர்மையுங் கண்ணியமுங் கொண்ட வங்கிஷத்தைச் சேர்ந்தவன். இன்னும் என்ன தேவை? இப்படி எண்ணி எண்ணி ஒரு சிறு பெண்ணை அப்படுபாவிக்குக் கட்டிக்கொடுத்து விடுவார்கள். அச்சாண்டாளனுடன் அவள் சீவித்த நாட்களெல்லாம் கண்ணீர் சிந்தியே கழிக்கும்படி ஆயிற்று. மேலும் இத்துயரத்தில் அவளுக்கு அற்ப ஆறுதலுமில்லாதிருந்ததே அதன உக்கிரத்தை அதிகரித்ததென்று சொல்லவும் வேண்டுமோ? மோனிக்கம்மாளுக்கு இந்நிர்ப்பாக்கிய விஷயங்கள் ஒன்றுமே சரியாய்த் தெரியாது. அவள் மாசில்லா மடந்தை. சுத்த சுசீலி. தன் தாயாரை நம்பி, தன் தகப்பனுடைய தீர்மானத்திற் கிசைந்தாள். மேலும் பாலியப் பெண்களுள் அநேகம்பேர் செய்வதுபோல், அவளும் விவாகத்தன்று குரு சுவாமியார் அவளைப் பார்த்து "இந்தப் பத்ரீஷியூஸை நமது தாயாகிய திருச்சபையின் ஆசாரத்தின்படி உனது உண்மையான மணவாளனாக ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறாயோ" வென்று கேட்டபோது பெற்றோர்கள் நியமித்த மணவாளனைக் கட்டிக்கொள்வதே ஒரு கீழ்ப்படிதலுள்ள குமாரத்தியின் கடமை யெனபதாகச் சிந்தித்து, தனது கரத்தைத் தன் மணவாளனுடைய கரத்தின்மீது வைத்து சம்மத மென்று விடையளித்தாள்.

இந்த விவாகம் தனக்குச் சற்றாவது பிடிக்காதென்று வினய மரியாதையோடு அர்ச. மோனிக்கம்மாள் தன் பெற்றோரிடம் ஆட்சேபித்தாளென்றும், அவர்கள் கொஞ்சமேனும் அவ்வாட்சேபனையைச் சட்டைசெய்ய வில்லையென்றும், ஆதலால் அரை மனசுடன் கலியாணத்திற்கு ஒத்துக்கொண்டாளென்றும், சில ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அர்ச். அகுஸ்தீன் என்பவருக்கு மாதாவாயிருக்கும் பாக்கியத்தை, அவள் கடின துன்பப்பட்டு அடைய வேண்டுமென்று தேவ நியமனமிருந்தது. இவ்விவாகத்தினால் துன்மார்க்கனான தன புருஷனையாவது அறநெறிக்குக் கொணடுவரக்கூடுமாயிருக்குமெனறு, அவள் ஒருவாறாய் தன் மனதைத் தேற்றிக்கொணடு, வரப்போகும் கஷ்ட துன்பங்கள் யாவற்றிற்கும் அதிக தைரியத்துடன் தன்னை ஒப்புக்கொடுத்தாள். இவ்விவாகம் தனக்கு வேண்டாமென்று அவள் கர்த்தரிடம் எவ்வளவோ மனறாடியும் அம்மன்றாட்டு அநுகூலமடையாவிட்டாலும, அமமனறாட்டின் பலனாக விசுவாசம் பொறுமை தயாளகுணம் என்னும் சிறந்த பொக்கிஷாதிகளை யடைந்து, இனித் தன சமுசார வாழ்க்கையில் துனபம உண்டென்று அறியாமலோ, அல்லது அறிந்தும் தன்னைத் தேவ திருவுளததிற்குப் பரிததியாகம் செய்தோ, விவாகததனறு திருக்கோயில் பீடத்தை நோக்கிச் சென்றாள். அப்போது அவள் திருவதனத்தில் பிரபைவிட்டு ஜொலித்த புண்ணிய பிரகாசத்தை யாவரும் பார்த்து அதிசயித்தார்கள்.

"இம்மாது சிரோமணி பீடத்தின் அடியில் முழந்தாட்படியிட்டு, சமுசார அந்தஸ்திற் குட்படத் தன சம்மதத்தைத தெரிவித்து, அவ்வாழ்க்கைக்கடுத்த துனப துயரஙகளோடு தன் சீவியத்தையும் பூரண மனதுடன பிணைத்துக்கொண்டதை எவ்வாக்கால விவரிக்கக்கூடும? அகத்தினழகு முகத்தில் விளங்கு மெனபதுபோல், அவளது ஆத்துமத்தின கெம்பீரம் அவளது முகத்தில் சமபிரமமாய் அந்நேரத்தில் துலங்கிச் சோபித்தது. அக்கெம்பீரத்தை ஒருவன சரியாய்க் கண்டுபிடிக்கவேண்டுமானால் தானே

அதனைக் கண்ணாரக் கண்டு, மனதாரச் சிந்தித்து, ஆனந்திக்க வேண்டுமேயல்லாது இன்னொருத்தர் வெறும் வாயால் அதைப் பற்றும் பற்றாய் விவரித்துக் காட்டுவது முற்றிலும் அசாத்தியம்.''

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

54-ம் அதிகாரம்.

அந்தக் குழந்தையின் இரு கண்விழிகளைக் கொண்டுவந்து எனக்குக் காட்டவில்லையா?

ஸ்கூல் ரிப்போர்ட்டு வாசிக்கப்பெற்று முடிவாகவே, விஜயாங்க மகாராஜா அவர்கள் பிள்ளைகளுக்குப் ப்ரைஸ் அளிக்கத் தொடங்கினர். அன்னேரத்தில் பிரதர் லியோவும், பிரதர் சிரிலும் இராஜாவுக்குத் துணையாக நின்றார்கள்.

ப்ரைஸ் கொடுத்து முடியவே, மகாராஜா அவர்கள் தமது ஆசனத்தினின்று எழுந்து பின் வருமாறு உபந்நியாசம் செய்தார்:—

"பிஷப் ஆண்டவரே! ரெவரெண்டு பாதர்களே! கனவான்களே! ஸ்டூடெண்ட்ஸ்மார்களே!

மிகவும் சிறந்ததும் மேன்மை தங்கியதுமான இந்தச் சபைக்கு யான் இன்று அக்கிராசனாதிபதியாக வீற்றிருப்பது எனக்குப் பெருங் கவர்வமும் மகிமையுமென்று எண்ணுகின்றேன். என்னை இங்கு இதற்காக வரவழைத்ததற்கு அனேக வந்தனங்கள் மானேஜர் அவர்களுக்கு.

உள்ளங்கையைப் பார்ப்பதற்குக் கண்ணாடி அனாவசியம், என்பதுபோல, இந்தக் கல்விச்சாலையின் மேன்மையையும் அபிவிர்த்தியையும் உங்களுக்கு அறிவிப்பதற்கு தற்போது வாசிக்கப் பெற்ற ரிப்போர்ட்டும், கவர்ன்மெண்ட் இன்ஸ்பெக்டரால் கொடுக்கப்பட்டுள்ள நற்சாட்சிப் பத்திரமுமே போதுமாயிருக்கக்கொள்ள, வேறு உருஜூ அனாவசியமென்பது எனக்குள்ள அபிப்பிராயம்.

இந்தச் சிறந்த நகரத்திலும் இந்த ஜில்லாவிலும் அனேக கல்விச்சாலைகளுண்டு. ஸ்டூடென்ட்ஸ்கள் சர்க்கார் பரீட்சையில் தேறும்படி உபாத்திமார் சர்வ பிரயத்தனமும் படுகிறது போல, ஸ்டூடென்ஸ்களும் மகா அபிலாஷையுடன் அதே கருத்துக்காகப் பிரயாசைப்படுகிறார்கள். இதுவே கல்விச்சாலைகளுக்குள்ள நோக்கமும் கருத்துமாகும் என்னலாம்.

ஆனால், இந்தக் கல்விச்சாலைக்கும் மற்றக் கல்விச்சாலைகளுக்கும் ஓர் வித்தியாசமுண்டு. இதைக் கவனித்துப் பார்ப்போர் தவிர, மற்றவர்கள் அறியார். இது என்ன வித்தியாசமெனில், இந்தக் கல்விச்சாலையில் படிப்பு எவ்வளவு முக்கியமாயும் பிரதானமாயும் கவனிக்கப்படுகிறதோ அவ்வளவு முக்கியமாயும் பிரதானமாயும் இதில் வாசிக்கும் பிள்ளைகளின் நன்னடைத்தையும் நல்லொழுக்கமும் இதன் பண்டிதர்களால் கவனிக்கப்பட்டு வருவதேயாம்.

இது நிற்க, இந்தக் கல்விச்சாலை மற்றக் கல்விச்சாலைகளைவிட மாணாக்கர்கள் தொகையில் மாத்திரமல்ல, ஆனால் சர்க்கார் பரீட்சையில் தேறுகிறவர்களின் தொகையிலும் அதிகப்பட்டு வருவதை வருஷா வருஷமும் கண்ணுற்று வருகிறோம். என்ன இந்த வித்தியாசம்? இந்த வித்தியாசாலைக்கு யாதொரு எண்டௌமென்றும் இல்லை; அப்படி யாதோர் விசேஷமான சர்க்கார் கிராண்டும் இதற்கில்லை. அப்படியானால், இந்தக் கல்விச்சாலை இவ்வளவாக விருத்தியடைவதற்குக் காரணமென்ன? அதைப்பற்றி நான் சொல்லுவதைக் கேளுங்கள்.

இந்த வித்தியாசாலையில் வித்தை கற்பித்து வரும் உபாத்திமார் எப்பேர்ப்பட்டவர்கள்? கல்வியில் தேர்ந்த பண்டிதர். கலியாணஞ் செய்து கொள்ளாத பிரமசாரிகள். உலகத்தை உத்தாரணஞ் செய்த சுயாரிஷிகள். தங்கள் தேகத்தை மூட வஸ்திரமும், தங்கள் உயிரைக் காப்பாற்ற அவசியமான ஆகாரமும் இருந்தால் இந்த மகான்களுக்குப் போதுமானது. பிரபஞ்சத்தை முற்றிலுந் துறந்து, பகவானை மாத்திரம் சிந்தித்து தியானிக்கும் பரம யோகிகளான இவர்கள் சிற்றின்ப சுகத்தையும் பேர் பெருமையையும் கீர்த்தி வெகுமானத்தையும் புறக்கணித்து, சர்வேசுரனை மாத்திரம் தாவி நடக்கிறவர்கள்!

இந்தப் புண்யவான்கள் கலியாணமில்லாத விரத்தராயிருப்பதால், அவர்களுடைய வேதக் கோட்பாட்டுப் பிரகாரம் பிறரைத் தங்கள் சகோதரர்களாகவும், திக்கற்றவர்களைத் தங்கள் பிள்

ளைகளாகவும், ஏழை எளியவர்களைத் தங்கள் நேசராகவும் பாவித்து அவர்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசையும் ஊழியமும் புரிந்து வருகிறார்கள்!

கேளுங்கள், ஸ்டூடென்ட்ஸ்மார்களே! உங்களுக்குப் புண்ய குணமுடைத்தான இம்மகாத்மாக்கள் எவ்வளவு அக்கரை கவலையுடன் கல்விப் பாலை ஊட்டி வருகிறார்கள். அந்த மேலான கருத்தைக்கொண்டே, குலம், மதம், ஸ்திதி யென்று பாராமல், சகலருக்கும் அன்புடன் கல்விபயிற்று கிறார்கள்! இவர்கள், விடாமுயற்சியோடும் அக்கரை பிரயாசையோடுங் கல்வி வித்தையை மாணாக்கருக்குக் கற்பிப்பதால் இந்தப் பாடசாலையில் அனேகர் வருஷா வருஷமும் பரீட்சையில் தேறி வருகிறார்கள்.

ஆகையால், ஸ்டூடென்ட்ஸ்மார்களே, கல்வியாகிற ஆகாரத்தை உங்களுக்கு ஊட்டும் உங்கள் உபாத்திமாரை ஒருபோதும் மறவாதேயுங்கள். "நன்றி மறவேல்" என்னும் மூத்தோர் வாக்கை என்றும் நினைவுகூர்ந்துகொள்ளுங்கள். காலத்தில் நீங்கள், உங்கள் தாயாகிய வித்தியாசாலையை விட்டு உத்தியோகத்தினிமித்தம் பல இடங்களுக்குச் சென்று உத்தியோகஞ் செய்யுங்கால், உங்கள் மாதாவாகிய இந்த வித்தியாசாலையையும், உங்கள் பிதாக்களாகிய உபாத்திமாரையும் மறவாமல், அவர்கள் உங்களுக்குப் போதித்துவந்த சன்மார்க்கத்தையும் நன்னடத்தையையும் என்றும் நினைவுகூர்ந்து, கடவுளுக்கு உகந்தவர்களாயும், எதார்த்தவாதிகளாயும், சன்மார்க்கராயும், பிரமாணிக்கமுள்ள பிரஜைகளாயும் நடக்க சர்வ பிரயாசையும் படுவீர்களாக. பேராசையால் இலஞ்சத்துக்குக் கைநீட்டாதேயுங்கள். தேச அபிமானிகளாய் யாரையும் இகழாமல் சகலர்மட்டிலும் மரியாதையாயும் சுசீலமாயும் நடந்துகொள்ளுங்கள். கர்வத்தையும் பெருமையையும் விட்டொழித்துச் சகலர்பேரிலும் நட்பு வைத்து ஒழுகுங்கள். இவ்வாறு செய்வீர்களேயாகில், இதுவே உங்கள் உபாத்திமாருக்கு நீங்கள் காட்டவேண்டிய கைம்மாறுயிருக்கும். இதற்காகவே உங்களிடம் இந்தப் புருஷோத்தமர்கள் இராப்பகலாய் உழைத்துவருகிறார்கள்.

இது நிற்க, தர்ம விஷயமாக, அல்லது பரோபகார வேலையினிமித்தமாக, அல்லது வித்தியாசாலையின் அபிவிர்த்தியின் காரணமாக, உங்கள் உபாத்திமார் பொருளுதவி கேட்பார்களேயானால் நீங்கள் முன்னுக்குவந்து அவர்களுக்குப் பொருளுதவி புரிவதுடன் உபன்னியாசத்தாலும் பத்திரிகையில் பிரசுரிப்பதாலும் மற்றவர்களும் அவர்களுக்கு உதவி புரியும்படி செய்வீர்களாக

இங்கு சந்தோஷ உல்லாசத்துடன் வீற்றிருக்கும் ஸ்டூடென்ட்ஸ்மாருடைய பிதா மாதாக்களாகிய கனவான்களே, உங்கள் மைந்தர் இந்தப் பள்ளியில் வித்தியாப்பியாசஞ் செய்வதினிமித்தம் நீங்களுஞ் சந்தோஷித்து மகிழக் காரணமுண்டு. ஏனெனில், யான் சற்றுமுன் விவரித்துக்காட்டிய புண்ய குணங்களை உடைத்தான இந்த உபாத்திமார்களுடைய கண்காணிப்பில் உங்கள் பிள்ளைகள் வளருகிற காரணத்தை முன்னிட்டேயாம். உங்கள் மக்கள் பொய்ப்புரட்டு சொல்லாமலும், திருட்டுத் திரியாவரஞ் செய்யாமலும் நற்குணசாலிகளாய் நடந்து, தேவபக்தியுள்ளவர்களாய் ஒழுகி, உங்களுக்கு என்றும் அமைந்து பணியும்படி இந்த உபாத்திமார்கள் அவர்களுக்கு உபதேசித்து, இனி அவர்கள் பிழைப்பதற்கான நல்வழியைக் கற்பித்து வருவதால், நீங்களும் உங்கள் பிள்ளைகளின் பாக்கியத்தை நினைத்துச் சந்தோஷிப்பீர்களாக.

ஆகையால் கனவான்களான பெற்றோரே, உங்கள் பிள்ளைகளை நாடோறுங் கல்விச்சாலைக்கு ஒழுங்காய் அனுப்புவதுடன சேரவேண்டிய ஸ்கூல் கட்டணத்தைச் சீராய்ச் செலுத்தவும் மறவாதேயுங்கள். இப்படிச் செய்து உங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதால எப்போதும் அவர்களுடன் சகலத்திலும் சுகப்படுவீர்கள் என்றார்."

மகாராஜாவின் இந்தச் சிறந்த உபன்னியாசம் முடிவாகவே, அங்கு கூடியிருந்த சகலரும் அக்கிராசனாதிபதியின் பிரசங்கத்தில் கூறப்பட்ட சங்கதிகளை அங்கீகரிப்பதின் அர்த்தமாக கரகோஷஞ் செய்தனர்.

இதற்குப்பின் நாடகமேடையின் திரைச் சீலைத் தாழ விழவே, சுமார் 50 பேர் சிறுவர் சிப்பாய் உடுப்புடன் இடையில் கத்தி கட்டிக் கொண்டு, கையில் துப்பாக்கி பிடித்துக்கொண்டு அணிவகுக்கப்பட்டு வரிசை வரிசையாய் நின்றார்கள். இவர்கள் பத்து முதல் 14 பிராயமுள்ள சிறுவர்கள். இவர்களுக்குப்பின் பாண்டுகாரர் நின்றுகொண்டு வாத்தியஞ்செய்ய ஆரம்பிக்கவே, சிறு சிப்பாய்கள் கவாத்துசெய்ய ஆரம்பித்தனர். பாண்டுவாத்தியத்துக்குத் தகுந்தாற்போல் கால் எடுத்துவைத்து முன்னும் பின்னுமாகச் சென்று, இரு பக்கமும் திரும்பி நடிப்பதைப்

பார்க்கும்போது வெகு வேடிக்கையாயிருந்தது. வாத்தியத்துக்கு இசைந்து பாடிக்கொண்டு கால் எடுத்துவைத்து அங்குமிங்கும் திரும்பும்போதும், கையை வீசி மடிக்கும்போதும், அப்போதைக்கப்போது ஒற்றை முழங்காலிலிருந்து துப்பாக்கியை நீட்டும்போதும், கப்பித்தானுடைய ஆர்டர்படி சலூட் கொடுக்கும்போதும் அத்தனைபேரும் அற்பப்பிசகின்றி ஒழுங்காயும் சீராயும் கவாத்து செய்ததைப் பார்த்த சபையோர் ஆச்சரிய பிரமைகொண்டு மெச்சினார்கள் சிறு சிப்பாய்களை. இந்தக் கவாத்துக்குப் பெயர் வாத்தியத்துடன் மிலிட்டெரி டிரில்.

இது முடிவாகவே திரைச்சீலை மறுபடியுங் கீழே விழவும், ஒரு நேர்த்தியான இராஜ அரண்மனை கண்ணுக்குத் தென்பட்டது. இதன் அலங்கார ஜோடினையின் வருணிப்பை நாவால் கூறுந் தன்மையல்ல. இந்த அரண்மனை சித்திரிக்கப்பட்ட படமேயாயினும், பார்ப்பவர்களுக்கு அது மெய்யான கட்டிடம்போலக் காணப்பட்டது. சுவற்றில் தொங்கும் பட்டுப்பட்டாவளிகளும், பளிச் பளிச்சென்று மின்னும் பொன் ஜாலர்களும், குஞ்சங்களும், அங்கு போடப்பட்டிருக்கும் மேஜைகளும், அவைகள்மேல் வைக்கப்பட்டிருக்கும் புஷ்ப ஜாடிகளும் பூங்கொத்துகளும், தரையில் விரிக்கப்பட்டிருக்கும் ரத்ன கம்பளங்களும் அங்கு போடப்பட்டிருக்கும் சிறந்த ஆசனங்களும், அங்காங்கு அலங்கார உடுப்புகள் தரித்து நிற்கும் சிப்பாய்களும், வாசலிற் படுத்திருக்கும் நாயும், இன்னும் அங்கு கண்ணுக்குக் காணப்படும் சகலமும் கையால் எழுதப்பட்டவைகளாகக் காணப்படாமல் மெய்யான வஸ்துக்களாகக் காணப்பட்டன.

இந்த அற்புத காட்சியைச் சபையோரனைவரும் அதிசயத்துடன் பார்த்துக்கொண்டிருக்கையில், அரசனும் அரசியும் தங்கள் ராஜ பரிவாரத்துடன் அலங்காரமாய்ச் சித்தப்படுத்தப்பட்டிருக்கும் இராஜ மண்டபத்தில் தோன்றினர். இவர்களுடைய நடை, உடை, பாவனைகள் யாவும் 10-ம் நூற்றாண்டிலிருந்தவர்களுடையனவாயிருந்தனர். சம்பாஷணைகளும் பேட்டிகளும் விருந்துகளும் வெகுநேரம் நடந்தபின் திரை விடப்படவே, பாண்டுவாத்தியம் முழங்கிற்று.

இதற்குப்பின் ப்ரோகிராமில் கண்ட பிரகாரம் பாட்டுக் கச்சேரியும், பஜனையும், காட்டில் வேட்டை ஆடுதலும், பாண்டு வாத்தியமும் ஒழுங்கே நடந்தேறின.

இதற்குப்பின் நாடகத்தின் ஐந்தாம் பாகம் ஆரம்பமானது. திரைச்சீலை கீழே விழவே, நாடக மேடை வெளிச்சமின்றி அந்தகாரமாயிருந்தது. மண்டபத்திலுள்ள தீபங்களின் முன் பக்கம் மறைக்கப்பட்டு, ஜனங்களிருந்த பக்கத்தில் மாத்திரம் மங்கலான வெளிச்சம் பிரகாசித்துக்கொண்டிருந்தது. அதில் உயர்ந்த மரங்களும், முட்செடிகளும், புல்பூண்டுகளும், சிறு குன்றுகளும் கண்ணுக்குத் தோன்றின. அந்தகாரமாயிருந்தபடியால் பார்க்கிறதற்கு பயங்கரமாயிருந்தது. அப்போது 6-பிராயமுள்ள ஒரு சிறுவன் வழிதவறி பயப்பிராந்தி கொண்டவனாய் ஒண்டியாக அடிமேல் அடி எடுத்துவைத்து நடக்கிறான். அந்நேரத்தில் இராக்கால பக்ஷிகளாகிற வெளவால், ஆந்தை, கோட்டான் முதலிய பறவைகள் கீச் கீச்சென்று பயம் உண்டாக்கத்தக்க விதமாய் கத்திக்கொண்டு பறப்பதையும், குள்ளநரிகள் ஊளையிட்டுக்கொண்டு அங்குமிங்கும் ஓடுவதையும், தூரத்தில் ஓநாய், முதலிய துஷ்ட மிருகங்கள் பெருந் தொனியுடன் கர்ச்சிப்பதையும், பாலகன் கேட்டு பயத்தால் நடுங்கித் துடித்து நிற்கிறான். அந்நேரத்தில் மேகங் கருத்து பயங்கரத்துக்குரிய இடி முழக்கம் உண்டானது. உக்கிரமான காற்றுடன் பெரும் மழையும் வர்ஷிக்கத் தொடங்கவே, பளிச் பளிச்சென்று மின்னலும் இடைவிடாமல் மின்னிக்கொண்டே இருந்தது. மேடையில் காணப்படும் மின்னலின் பிரகாசத்தால் மாத்திரம் காட்டில் காணப்படும் பயங்கரத்தையும் அந்தப் பாலகனையும் பார்க்கக்கூடுமாயிருந்தது. அந்நேரத்தில் காட்டின் நான்கு திசைகளிலும் கிடுகிடென்று விழும் இடி முழக்கத்தைப் பாலகன் கேட்டு, பயந்து, கலங்கி, நேத்திரங்களை மேலே உயர்த்தி, வாயில் என்னவோ மெதுவாய் உச்சரிக்குந் தருணத்தில், அவன் பக்கத்திலிருந்த பெரும் விருக்ஷத்தின்மேல் இடி விழுந்து அதன் கிளைகள் மளமளவென்று முறிந்து தன் பாதத்துக்கு அருகாமையில் விழுவதைக் கண்ட சிறுவன் நடுநடுங்கி, நெஞ்சம் பதைத்து, நேத்திரங்களில் கண்ணீர் உதிர்த்து, கை ரெண்டையும் மேலே உயர்த்தி பின்வருமாறு பாடத் துவக்கினான்.

இராகம் – காம்போதி. ஆதி தாளம்.

பல்லவி.

அமலோற்பவமாமரியாயே எனக்
கநுக்கிரகம் புரிந்தருளுந் தூயே

அநுபல்லவி.

சமயந் தனில் உந்தன்
தாசர்க் குதவும் நீரே
தனயன் என் மீது உன்றன்
தண்ணருள் சொரி வீரே

சரணங்கள்.

1 தந்தை தாயரை நான் இழந்தேன் – கொடு
சத்துருக்கள் கையில் நான் விழுந்தேன்
இந்த அத்வானக் காட்டில்
எவரும் துணை இல்லையே
இரக்கம் புரிந்து நீர்
நீக்கிடும் என் தொல்லையை.

2 கொடிய மிருகங்கள் கூட –பனி
குளிராலே என்றன் தேகம் வாட
அடியேன் ஓர் திக்கின்றி
அலைந்துமே திரிகின்றேன்
அரும் பசியாலே வாடி
அழுது நீர் சொரிகின்றேன்.

3 திக்கற்றவர்க்கு அடைக்கலமே –ஏழை
சேயன் எனக்குத் தாரும் பலமே
இக்குவலயந் தனில்
இறைஞ்சி மன்றாடினோர்க்
கிரங்காமல் போனதுண்டோ
என்றார் பர்நர்து நீர்.

பாலகன் இவ்வாறு பாடி முடியவே, பயங்கரத்துக்குரிய புயல் காற்றும் மழையும் நின்றது. இருளும் மறைந்து நக்ஷத்திரங்களின் பிரகாசம் காணப்பட்டது. பாலகனும் அருகாமையிலிருந்த பிரமாண்டமான மரத்தின் பொந்தில் சென்று உட்கார்ந்து தலை சாய்த்தான். இதன்பின் திரை உயர்த்தப்பட்டது. நாடகமேடையில் காணப்பட்ட மிருகம், பக்ஷி, முதலியவை வில் சூக்ஷத்தாலும், இடி, மின்னல் முதலியவை மின்சார சக்தியாலும் வெகு சாமர்த்தியத்துடன் அமைக்கப்பட்டபடியால்; பார்க்கிறதற்கு மெய்யானவைகளாகக் காணப்பட்டன. இதற்குப்பின் நடந்தேறின நாடக விசேஷங்கள் விவரிப்பதற்கு விரிவானதால், அவைகளை விட்டுவிட்டு கடைசி சம்பவத்தை மாத்திரம் இங்கு எடுத்துரைப்போம்.

திரைச்சீலை விழவே, வத்திக்கான் என்னும் அர்ச். பாப்பானவருடைய அரண்மனை வெகு நேர்த்தியாய் சித்திரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரமாண்டமான கட்டிடங்களில், அவர் கொலுவேறி தரிசனம் கொடுக்கும் மண்டபம் மாத்திரம் வெகு சாமர்த்தியத்துடன் சித்திரிக்கப்பட்டிருந்தது. இது சித்திரப்படமாயினும், பார்வைக்கு மெய்யாகவே கட்டிடமாகத் தோன்றிற்று. அதில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மேஜைகளும், அலங்காரமான சிம்மாசனங்களும், சிறந்த ஆசனங்களும், சுவரில் தொங்கும் பட்டுப்பட்டாவளிகளும் கண்ணுக்கு மிகவும் அலங்கார சிறப்பாய்க் காணப்பட்டன.

80-பிராயமுள்ள ஒரு விருத்தாப்பியர் கண் கவிழ்ந்து, முதுகு வளைந்த பிரகாரம் ஒரு ஊன்றுகோலின் உதவியால் அடிமேல் அடியெடுத்துவைத்து, அநேக பிரபுக்களாலும் போர்ச் சேவகராலும் சூழப்பட்டவராய் பாப்பரசருடைய கொலு மண்டபத்தில் போய்ச் சேரவே, அங்கு நின்றுகொண்டிருந்த சேவகர் அரசருக்குச் செலுத்தத்தகும் சலூட் கொடுத்தார்கள். அந்த விருத்தாப்பியருக்கு சிம்மாசனத்தைச் சூழ்ந்து நின்றுகொண்டிருந்த மேற்றிராணிமாருங் குருப்பிரசாதிகளும் மேரை மரியாதைசெய்து, அவரை ஒரு ஆசனத்தில் அமரச் செய்தார்கள். விருத்தாப்பியரோவெனில் யாரோடும் பேசாமலும், தமக்குக் காட்டும் மேலான மேரை மரியாதையைக் கவனியாமலும் மகா துக்காகிராந்தராய் ஆசனத்தில் அமர்ந்தார்.

சற்று நேரத்துக்குள் அநேக மிலிட்டரி ஆபீசர்களும் சிப்பாய்களும் கொலு மண்டபத்தில் பிரவேசித்தார்கள். அவர்களுக்குப்பின் அனேக மேற்றிராணிமாரும் கர்தினால்மாரும் அங்குவந்து சேரவே, எட்டு சிப்பாய்களால் சுமக்கப்பட்ட நேர்த்தியான சிம்மாசனத்தினின்று பாப்பானவர் இறங்கி, கொலு மண்டபத்தில் ஸ்தாபகமான தமது சிம்மாசனத்தில் எழுந்தருளினபோது, அந்த மண்டபத்திலிருந்த அனைவோரும் எழுந்து அவருக்கு வணக்காசாரம் புரிந்தார்கள்.

கர்தினால்மார்களால் சூழப்பட்டு சிங்காசனபதியாய்த் துலங்கும் பாப்பரசருடைய சன்னிதானத்துக்கு ஷை வயோதிகர் சென்று, அவருடைய காலில் சாஷ்டாங்கமாய் விழுஞ் சமயத்தில், பரிசுத்த பிதா அவரைத் தாங்கிப்பிடித்துக் கட்டி அரவணைத்து, தமது பக்கத்து ஸ்தானத்தில் அவரை அமரச் செய்தார்.

அப்போது அந்த விருத்தாப்பியர் பாப்பானவரை நோக்கி, திரேகம் நடுங்கி வாய் குளற, கைகால் வெடவெடவென்று ஆட "பரிசுத்த பிதாவே! தேவரீர் சில மாதங்களுக்குமுன் அர்ச்.

இராயப்பருடைய சிம்மாசனம் ஏறினதினால், நானும், உலகிலுள்ள மற்ற மன்னர்களைப்போல தேவரீருக்கு என்னுடையவும் என் ஆளுகைக் குட்பட்ட பிரசைகளுடையவும் சந்தோஷபுகழ்ச் சியை தேவரீருக்குச் செலுத்தி தேவரீருடைய அப்போஸ்தோலிக் ஆசீர்வாதத்தைப் பெறும்படி இவ்விடம் வந்தேன். மேலும் தேவரீரிடத்தில் ஓர் உபகாரத்தை மனுச்செய்யவும் வந்தேன்" என்றார்.

அதற்குப் பாப்பானவர் "மகிமை தங்கிய இராஜேந்திரனே, கேளும் நீர் கோரினதை" என்றார்.

விருத்தாப்பியர்.—அடியேன் மன்றாடுவதை அளிப்பீரோ?

பாப்பானவர்.—நம்மால் கூடுமாகில் சந்தேகமறப் பெறுவீர்.

விருத்.—பெரும் பாதகத்தைப் புரிந்தேன் பரிசுத்த பிதாவே!

பாப்.—மானிடர் அனைவோரும் பாவிகளே.

விருத்.—என் பாவமோ மகா தோஷமுள்ளது பரிசுத்த பிதாவே!

பாப்.—அப்படியானால் நம்மோடு தனித்துப் பேசவேண்டுமோ?

விருத்.—இல்லை. பிதாவே, என் பாதகத்தை உலக முழுவதும் அறிவது ஞாயம். தாவீது இராஜாவைப்போல் பெருங் கொலையைப் புரிந்தேன் பரிசுத்த பிதாவே.

பாப்.—அவரைப்போல் பச்சாத்தாபப்பட்டால், சந்தேகமற பொறுத்தல் அடைவீர்.

விருத்.—எனக்குப் பொறுத்தல் கிடைக்குமோ? பரிசுத்த தந்தையே! (என்று விம்மியழுதார்).

பாப்.—சர்வேசுரனுடைய கிருபைக்கு மட்டில்லை யென்று அறியீரோ? குமாரனே.

விருத்.—ஆம் தந்தையே, ஆனால் என் பாதகமோ, ஐயையோ! மகா தோஷகரமுள்ளது. ஒரு இராஜ குமாரனைக் கொலைசெய்தேன். பிதாவே! இந்தப் பாதகத்தை அநேக வருஷங்களுக்கு முன் கட்டிக்கொண்டேன். அது முதல் மனச் சமாதானம் இன்னதென்று அறியேன். அது முதல் என் கண் நித்திரையை அறியாது. என்னால் கொலைசெய்யப்பட்டவன் என் கண்ணுக்கு மறையா நிழல்போல் நிற்கிறான். எப்படி இப்பெரும் பாதகம் பொறுக்கப்படும்?

பாப்.—தகுந்த மனஸ்தாபமும் பிரதிக்கினையுமிருக்குமாகில் சகல பாவங்களுக்கும் பொறுத்தலுண்டு குமாரனே.

விருத்.—(உடனே அவர் பாதத்தில் முழங்காலிலிருந்து) பரிசுத்த பிதாவே, என் எஜமானும் ஆண்டவனுமான என் இராஜ பாலகனைக் கொலைசெய்து அந்தப் பாலகனுடைய இரத்தத்தை மிதித்த விதமாய் சிம்மாசனம் ஏறினேன். அதற்காக இப்போது என்ன பரிகாரம் செய்ய வேண்டியிருந்தாலும் செய்யத் தயாராயிருக்கிறேன். என் தலையைக் கொடுக்கவேண்டியிருந்தாலும், இதோ கொடுக்கிறேன். ஆனால், என் பாதகம் பொறுக்கப்படுமோ? தந்தையே.

பாப்.—இராஜேந்திரனே, நீ இப்போது மெய்யான மனஸ்தாபப்பட்டு சகல பரிகாரத்துக்குந் தயாராயிருப்பதால், உமது பாவத்தை மன்னித்தோம்.

விருத்.—பரிசுத்த தந்தையே! தேவரீர் கருணையுடன் பொறுத்தல் அருளித்ததற்காக ஆயிரம் வந்தனம். ஆனால் என்னால் கொலைசெய்யப்பட்டவனுடைய இரத்தம் தேவ சிம்மாசன மட்டுஞ் சென்று என்னைப் பழிவாங்க மன்றாடுகிறதே!

பாப்.—இல்லை. பரிச்சேதமில்லை. உமது கத்திக்கு இரையானவன் உம்மைப் பழிவாங்கும்படி சர்வேசுரனை மன்றாடாமல் உமக்குப் பொறுதி அளிக்கும்படி அவரைப் பிரார்த்திக்கின்றனன்.

விருத்.—மெய்தானோ பரிசுத்த பிதாவே?

பாப்.—பிரிய குமாரனே, இது சத்தியம். வேண்டுமானால், கொலை செய்யப்பட்டவனே இங்கு காணப்பட்டு உமக்குப் பொறுதி அளிக்கும்படி செய்வோம்.

விருத்.—அப்போது அரசன் (பாப்பானவருடைய பாதத்தில் சாஷ்டாங்க தெண்டனிட்டு.) பரிசுத்த தந்தையே, இந்தப் பெரும் உபகாரத்தைக் கட்டளையிடுவீராகில், புண்ணாயிருக்கும் என் மனம் ஆறிக் குணப்படும். நான் அநியாயமாய் அபகரித்துக்கொண்ட இராஜ முடியை அவருக்கு இந்த க்ஷணமே ஒப்புக்கொடுப்பேன். அதன்பின் மனச்சமாதானத்துடன் தவம்புரிந்து மரணத்துக்கு முஸ்திப்பு செய்வேன். பரிசுத்த தந்தையே! அந்த இராஜ குழந்தையைக் கடாக்ஷிக்க அடியேனுக்கு வரம் அளித்தருளும். தேவரீர் இவ்வுலகில் சர்வேசுரனுடைய பிரதிநிதியா

யிருப்பதால் உம்மால் சகலமும் சித்திக்கும் என்று நம்புகிறேன்.

பாப்.—இராஜ பிரபு! இப்போது நாம் ஏதோ ஒரு புதுமை செய்யப்போகிறோம் என்று எண்ணவேண்டாம். ஆகிலும் நீர் கொல்லத் தீர் மானித்த இராஜ குழந்தையானவரை தற்போது பார்ப்பீர்.

விருத்தாப்பியரான அரசனோடு அங்கு வந்து இராஜ பரிவாரத்துடன் நின்றுகொண்டிருந்த ஒரு பிரபுவை பாப்பானவர் நோக்கி:

"உமது முன்னிலையில் குழந்தையைக் கொல்லுவிக்கும்படி நீர் கட்டளை பெற்றீரல்லவா? பிரபு (பய நடுக்கத்துடன்) "ஆம், பரிசுத்த பிதாவே."

பாப்.—அந்தக் கட்டளையை நிறைவேற்றினீரோ?

பிரபு.—இல்லை, பரிசுத்த பிதாவே!

விருத்.—அந்தக் குழந்தையின் இரு கண் விழிகளையும் கொண்டுவந்து எனக்குக் காட்டவில்லையா?

பிரபு.—அவை அந்த இராஜபாலகனுடைய விழிகள் அல்ல. அப்போது அந்தப் பாலகனைக் கொல்ல எனக்குக் கை வராமல், அவனைக் காட்டில் விட்டுவிட்டு, ஒரு மானைக் கொன்று அதன் விழிகளைக் கொண்டுவந்து உமக்குக் காட்டினோம்.

விருத்.—(அதிசயத்துடன்) அப்படியானால் அந்தக் குழந்தை போன போக்கேது?

பிரபு.—அது எனக்குத் தெரியாது.

பாப்.—(தமது அருகாமையிலிருந்த கர்தினாலை நோக்கி) சங்கைக்குரிய கர்தினால் ஆண்டவரே! நீர் விவரித்துச் சொல்லும் அந்தப் பாலகனுடைய பிந்தின வர்த்தமானங்களை.

கர்தினால்.—(எழுந்து) அந்தக் குழந்தை இரெண்டொரு நாள் காட்டில் அலைந்து திரியும்போது, வேடர் கையில் அகப்பட்டான். அந்த வேடர் ஆறு பிராயமுள்ள அந்தப் பாலகனை நேப்பிள்ஸ் என்னும் நகரிலுள்ள எங்கள் மடத்தில் கொண்டுவந்து கொடுத்தார்கள். அந்தக் காலத்தில் நான் அந்த மடத்தில் சிரேஷ்டராயிருந்தேன். அந்த மடத்திலேயே அந்தப் பாலகனை ஜாக்கிரதையுடன் வளர்த்துவந்தோம். அந்தக் குழந்தை கழுத்தில் போடப்பட்டிருந்த பொன் வட்ட சுரூபத்தை நான் பார்த்தபோது, அதன் ஒரு பக்கத்தில் தேவமாதா சுரூபமும், அதன் பாதத்தில் ஒரு குழந்தை ரூபமும் அச்சடிக்கப்பட்டு அநேக விலை உயர்ந்த கற்களால் இழைக்கப்பட்டிருந்தது. அதன் அடியில் (Guiesp) குயிஎஸ்ப் என்னும் இந்தக் குழந்தை தேவதாயாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறான் என்னும் வாக்கியம் செதுக்கப்பட்டிருந்தது. மறு பக்கத்தில், இறந்துபோன அரசனுடையவும் அரசியுடையவும் நாமங்கள் அச்சடிக்கப்பட்டிருந்தன. இதை நான் பார்க்கவே, சில நாட்களுக்குமுன், காட்டில் வேட்டை ஆடும்போது, துஷ்ட மிருகத்தால் கொல்லப்பட்டதாக பிரஸ்தாபிக்கப்பட்ட இராஜபாலகன் இவரே என்று அறிந்துகொண்டேன். ஆனால் நாங்கள் இதைப் பற்றி யாருக்கும் தெரியப்படுத்தாமல், பிள்ளையைப் பத்திரமாய் வளர்த்து சகலவித கல்வி சாஸ்திரங்களையும் அவருக்குக் கற்பித்தோம். பையன் புத்திசாலியானபடியால் மேலான சாஸ்திரங்களை மகாத் திறமையுடன் கற்றறிந்து, காலத்தில் குருப்பட்டம் பெற்று, மேற்றிராணி அபிஷேகம் அடைந்து, மூன்று வருஷங்களுக்கு முன் கருதினால் பட்டம் பெற்றார். இந்த வருஷம் மேமீ 8வ பாப்புப் பட்டம்பெற்று இதோ நமக்குமுன் கிருடாதிபதியாய் அர்ச். இராயப்பருடைய சிம்மாசனத்தில் பாப்பரசராக எழுந்தருளியிருக்கிறார், என்றார்.

இந்த அதிசயத்துக்குரிய விருத்தாந்தம் அர்ச். பாப்பானவருக்கும், இதை வெளிப்படுத்தின கர்தினாலுக்குந் தவிர வேறே யாருக்குந் தெரியாதிருந்தபடியால், இதைக்கேட்ட சகலரும் அதிசய பிரமைகொண்டவர்களாய் மவுனமாய் நின்றார்கள்.

அரசனும், இரவில் பூதத்தைக்கண்டவனைப் போல் பயந்து நடுங்கி பேச வாய்வராமல் சற்று நேரம் மவுனக்கிராந்தனாய் நின்றபின், அழுகைப் பிரலாபத்துடன் பாப்பரசருடைய ஸ்ரீபாதங்களில் விழுந்து, "ஆ! தந்தையே! என் பாதகத்தைப் பொறுத்தருளும்" என்றான். அப்போது பாப்பானவர் குனிந்து தமது கையால் அரசனை தூக்கிவிட்டு:

பாப்.—நீர் கொல்ல தீர்மானித்தவர் இன்னாரென்று தெரியுமோ குமாரனே?

விருத்.—தெரியும் பரிசுத்த தந்தையே! சகலமும் தேவாதீனமாய்ச் சம்பவித்தது.

பாப்.—ஆம், நமது அன்புக்குரிய பெற்றோருடைய வேண்டுதலாலும் (தமது கழுத்தில் தொங்கும் தேவமாதா சுரூபத்தைக் காட்டி) இப்

பரிசுத்த தாயாருடைய விசேஷ ஆதரவாலும் நாம் சதிமானத்துக்குத் தப்பித்துக்கொண்டோம். ஆகையால் நம்மைக் கொல்ல துர் ஆலோசனைகொண்ட உமக்கு, எம் குமாரனே, முழுமன்னிப்பு அளிக்கிறோம்.

விருத்.—பரிசுத்த பிதாவே, இவ்வளவு கருணையுடன் அடியேனுக்கு மன்னிப்பு அளித்ததற்காக என்றும் வந்தனம். இப்பெரும் உபகாரத்தை ஒருபோது மறவேன்.

நான் உமது இராஜ சிம்மாசனத்தை அநியாயமாய் அபகரித்ததற்கான தண்டனையை அடியேனுக்கு விதிக்க மன்றாடுகிறேன், பரிசுத்த பிதாவே!

பாப்.—நீர் சாகுமட்டும் நமது இராஜ்ஜியத்தை ஆளுவீராக. அதற்குப்பின் வேறொருவரை நியமகம் செய்வோம்.

விருத்.—என் பாதகத்துக்கான தண்டனையை விதிக்க தமது கனத்தை மன்றாடிப் பிரார்த்திக்கின்றேன், பரிசுத்த பிதாவே.

பாப்.—உமது செலவால் 500 சிறு குழந்தைகளை வளர்த்துப் போஷித்து அவர்களுக்குக் கல்வி முதலியவைகளைக் கற்பிக்கும்படி ஏற்பாடு செய்வீராக. இப்போது சமானத்துடன் உமது இராஜ்ஜியத்துக்குத் திரும்பிப்போய், செபதவத்தால் சர்வேசுரனுக்கு நல்ல ஊழியஞ்செய்து, பிரஜைகளை அன்புடன் பரிபாலித்து, ஏழைகள் மட்டில்இரக்கங்காட்டி, தான தர்மத்தால் தேவ அனுக்கிரகத்தைப் பெறுவீராக. உமக்கும் உமது தேசத்துக்கும் பிரஜைகளுக்கும் நமது அப்போஸ்தோலிக் ஆசீர்வாதத்தை பாவிக்கின்றோம், என்றார்.

கெட்ட புத்தகம் எது?—ஆறு விதமான கெட்ட புத்தகமுண்டு. முதலாவது.—சாதாரணமான கெட்ட கருத்துகளைக் கொடுக்கும் புத்தகமும், 2-வது.—அசுசியமான கதைகளடங்கிய புத்தகமும், 3-வது.—நன்மைக்குக் கேடாக நிற்கும் வீண் காலப்போக்குப் புத்தகமும், 4-வது.—கெட்ட பத்திரிகை முதலானவைகளும், 5-வது.—சகுன சாஸ்திர புத்தகமும், 6-வது.—பிற மதஸ்தர் புத்தகமுமாமே. இந்தப் புத்தகங்களைப்பற்றிச் செய்யவேண்டியதென்ன? "இடறுகட்டையை எடுத்துவிடு" என்று இசையாஸ் 57-ம் அதிகாரத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி, எல்லா கெட்ட புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் நெருப்பிலிட்டு கொளுத்திப் போடு, அல்லாவிட்டால் நீ நரகத்துக்கு ஆட்டாளியாவாய்.

SISTER MARY ASSUNTA.
மரி அசுன்தா சகோதரி.
(மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னிகை.)

1878—1905.

(முன் தொடர்ச்சி.)

மரி அசுன்தா, முதல் மூன்று வருஷத்திற்குத் தான் கொடுத்த வார்த்தைப்பாட்டின் காலம் பூர்த்தியானபிறகு, தன் அதிசிரேஷ்ட தாயாருக்குப் பின்வரும் உருக்கமான கடிதத்தை எழுதியனுப்பினாள்:—

பிளோரென்ஸ்,
1903ஆ டிசம்பர்மீ 8வ.

"மிகவும் கனம் பொருந்திய அதிசிரேஷ்ட தாயாரே,

நான் முதல் தடவை வார்த்தைப்பாடு கொடுத்து இன்றையத்தினம் மூன்று வருஷங்களாகின்றன. சர்வேசுரனுடைய நன்மைதனத்தினாலும், உம்முடைய அன்பினாலும், மிகவும் வந்திக்கத்தக்க தாயாரே, நான் நித்திய வார்த்தைப்பாடு கொடுக்க ஏற்றுக்கொள்ளப்படுவேன் என்று நம்பிக்கையாயிருக்கின்றேன். நான் அதற்கு முற்றும் அபாத்திரவதியென்று எனக்குத் தெரியும். ஆனால், கீழ்ப்படிதலின் சீவியத்துக்கு என்னை சேசுநாதர் அழைத்திருக்கிறதின் நிமித்தம் நான் அவருக்கு என்றும் நன்றிபாராட்டுகிறேன் என்றாலும், அவர் நான் செய்யும்படி சித்தமாயிருக்கிற காரியங்களை நான் சிலவிசை செய்யத் தவறிப்போகிறேனென்று பயப்பட்டு இதனை எழுதுகிறேன். எனக்குண்டாகும் சிந்தனைகளையெல்லாம் உடனே என சிரேஷ்டருக்குச் சொல்லி திருப்தியடைகிறேன். துறவற சீவியத்துக்கு என்னை அழைக்கவும், பிறர் சிநேகத்தினால் நீர் என்னைச் சபையில் ஏற்றுக்கொள்ளவும் செய்ததில், சேசுநாதர் எனக்குக் காண்பித்த நேசத்தை நான் நினைக்கும்போது நான் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதங்களுடன் ஒத்துழைக்காதிருக்கிறதைப்பற்றி அஞ்சுகிறேன். நான் திரும்பவும் வார்த்தைப்பாடு கொடுக்க ஆசிக்கி

றேன். மிகவும் வந்திக்கத்தக்க தாயாரே, இதற்காகத் தங்களுடைய உத்தரவைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில், சிரேஷ்டர்களுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே என் பாக்கியம். அதுவே சர்வேசுரனுடைய சித்தமாம். என் சிந்தனை, வாக்கு, கிரியைகளெல்லாவற்றையும் அவைகள் எவ்வளவு அற்ப சொற்பமானவைகளா யிருந்தாலும், அவைகளைச் சேசுவின் திரு இருதயத்துக்கு வசீகரம்பண்ண விரும்புவதன்றியும், நான் பெற்றுக்கொண்ட வரங்களுடன் ஒத்துழைக்க என்னாலியன்றதை யெல்லாம் செய்யவும், அவரிஷ்டம் போல் என்னை நடத்தும்படியாகச் சர்வேசுரனுடைய கரங்களின் அடைக்கலத்தில் என்னை ஒப்படைக்கவும் விரும்புகிறேன்."

அதிசிரேஷ்ட தாயார் இக்கடிதத்தைப் பார்த்து அசுன்தாவின் புண்ணிய வர்த்திப்பின் மட்டில் பெரிதும் மகிழ்ந்தாள். அசுன்தாவின் புண்ணிய ஒழுக்கமும், குணலக்ஷணங்களும் எல்லோருக்கும் வெளிப்படையாயிருந்ததால், அவளை நித்திய வார்த்தைப்பாட்டுக்கு ஏற்றுக்கொள்ள யாதொரு தடையு மிருந்ததில்லை. 1904-ம் வருஷம் பெப்ரவரி மாதம் 13-ம் தேதி பிளோரென்ஸ் நகரில் இச்சுகிர்த சடங்கு நிறைவேறிற்று. தான் உருக்கமாய் நேசித்துப் பிரமாணிக்கமாய்ச் சேவித்துவந்த ஆண்டவருடன் நித்தியத்திற்கும் ஐக்கியமாகி, தன்னுடைய அதி உன்னத பரிசுத்தமான ஆசைகள் நிறைவேறின அத்தினத்தில் எத்தகமையான சிந்தனைகள், எத்தன்மையான ஆனந்த பரவசப்பற்றுதல்கள் இந்த யௌவன துறவியின் இருதயத்தை நிரப்பினவென்போம்! அந்த நாள் அவளுக்கு மிகவும் நிர்மலமான சந்தோஷ பூரிப்புள்ள நாளாக விருந்ததென்பதற்கு ஐயமில்லை. அச்சந்தோஷம் அவளுக்குத் தெரியாமலே, இன்னும் கொஞ்சகாலத்துக்குள் மோட்ச பேரின்பபாக்கியத்தில் அமிழ்ந்திப்போகக்கூடிய சந்தோஷமாயிருந்தது. ஏனெனில் அவளுடைய வாழ்நாட்கள் முடிய இன்னும் 14 மாதங்கள்தான் இருந்தன.

அவள் தன் பெற்றோருக்குக் கபடின்றி எழுதிய கடிதமானது அவளிருதயத்தில் பொங்கி எழும்பின நேசத்தையும் நன்றியுள்ள பற்றுதலையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றது. அஃது பின்வருமாறு:—

"எனது மிகவும் பிரியமுள்ள தாய்தந்தையரே,

சில சந்தோஷகரமான சங்கதிகளை உங்களுக்குத் தெரிவிக்க இக்கடிதம் எழுதுகிறேன். நான் வெகுகாலமாய் அபேக்ஷித்து மன்றாடிவந்த பாக்கியத்தையும், வரப்பிரசாதத்தையும் சேசுநாதர் எனக்கு அளித்தருளினர். நேற்றையத் தினம் கீழ்ப்படிதல், தாரித்திரம், விரத்தத்துவம் என்ற புண்ணியங்களை அநுசரிக்க வார்த்தைப்பாடுகொடுத்து அவருடன் எப்போதைக்கும் நான் ஒன்றிக்கப்பட்டேன். நான் எவ்வளவு பாக்கிய மனுபவிக்கிறேன் என்பதை வருணித்து விளக்க என்னால் முடியாது. நீங்களும் அதைச் சரியாய் உருபிகரித்துக்கொள்ள இயலாது. முதல் முதல் நான் சர்வேசுரனுக்கும் தேவமாதாவுக்கும் நன்றியுள்ளவளா யிருக்கிறேன். பின்னர் என்னை நித்திய வார்த்தைப்பாட்டுக்கு ஏற்றுக்கொண்ட என் சிரேஷ்டருக்கும், எங்கள் மிகவும் வந்திக்கத்தக்க அதிசிரேஷ்ட தாயாருக்கும் நன்றியறிந்திருக்கிறேன். எனக்குச் செய்த சகல நன்மைகளுக்காகவும் என் பங்கு சுவாமியாருக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். அவர் விதைத்த விதையின் பலனை இன்று நான் அனுபவிக்கிறேன். இந்த நல்ல சமாச்சாரத்தை அவருக்கு அறிவியுங்கள். அவர் எனக்காக வேண்டிக்கொள்வா ரென்பது எனக்குள்ள நம்பிக்கை. என் பிரிய பெற்றோரே, நீங்களும் உங்களுடைய குமாரத்தி மரண பரியந்தம் பிரமாணிக்கமாயிருக்கும்பொருட்டு மன்றாடுங்கள். நேற்றையத் தினம் திருச்சபைக்காக என்னைப் பலியாக ஒப்படைத்தேன். மனம் பொருந்திய ஓர் அற்ப பாவத்தில் விழுவதைவிட உடனே எனக்கு மரணத்தைக் கட்டளையிடவேண்டுமென்று சர்வேசுரனை மன்றாடினேன். நான் மெத்த பலயீனமுள்ளவள் என்பது மெய்தான். ஆனால் சர்வேசுரனுடைய உதவியாலும், தேவமாதாவின் வேண்டுதலினாலும், எனக்கு சகலமும் கிடைக்குமென்று நம்புகிறேன். என் பிரிய தாய் தந்தையரே, நீங்கள் என்னைச் சர்வேசுரனுக்குத் தத்தம் செய்ததினால், அவர் உங்களுக்குச் சமபாவனை அளிப்பாரென்று நிச்சயமாயிருங்கள்."

அஞ்ஞான தேசங்களுக்குச் சென்று மிஷன்களில் உழைக்க வேண்டுமென்ற பெரிதான ஆசை அசுன்தாவின் இருதயத்தில் இவ்வருஷங்களில் வளர்ந்துகொண்டே யிருந்தது. அவள் நித்திய வார்த்தைப்பாடு கொடுக்குங்காலம் நெருங்கிவரவே, அதிசிரேஷ்ட தாயாருக்குத் தன் னுள்ளத்திலிருந்த ஆசையை வெளியிட்டாள். இவ்விஷயமாய் அவள் வரைந்த கடிதம் பின்வருமாறு:—

''மிகவும் வந்திக்கத்தக்க அதிசிரேஷ்ட தாயாரே,

நான் சபையில் பிரவேசித்த துவக்கத்திலேயே, என்னுள்ளத்தில் உதித்ததோர் ஆசையை பிள்ளைக்குரிய வணக்கத்துடன் உமக்கு விளக்கிக்காட்ட இக்கடிதம் எழுதுகிறேன். இது வரையிலும், நான் இதைப்பற்றி எழுதத் துணிந்தேன் இல்லை. இதற்கு நான் அபாத்திரவதியாயினும் இதைக்குறித்து உமக்கு எழுதவேண்டுமென்பது எனக்குள்ள தீர்மானம். மிஷன்களில் வேலைசெய்ய முக்கியமாய்க் குஷ்டரோகிகளுக்கு ஊழியஞ்செய்ய நீங்கள் கன்னியர்களைக் குறித்தனுப்புகையில் என்னை மறவாதிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன். நமதாண்டவருக்கது சித்தமாயிருக்குமானுல், அவர் அதை உங்களுக்கு ஞாபகப்படுத்துவார். என் விருப்பத்தை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். இதனுல் எனக்குத் திருப்தியுண்டாகும்.''

அசுன்தா சகோதரியை மிஷன்களுக்கு அனுப்பவேண்டுமென்று அதிசிரேஷ்ட தாயார், ஏற்கனவே தீர்மானித்திருந்தாள். சீன தேசத்துக்குக் கன்னியர்களை யனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுகையில் மேற்கண்ட கடிதத்தை அதிசிரேஷ்ட தாயார் வரப்பெற்ருள். அசுன்தா சகோதரி நித்திய வார்த்தைப்பாடு கொடுத்து சில நாட்களானபிறகு, அவளுடைய சிரேஷ்ட தாயார், அசுன்தாவும் மிஷன்களுக்குப் பிரயாணமாகும் கன்னியர்களில் ஒருவளாயிருக்கிருளென்ற சுப செய்தியை அவளுக்குத் தெரிவித்தாள். அப்போது அசுன்தாவின் உள்ளம் பூரித்து மகிழ்ந்தது. சிரேஷ்ட தாயார் இதைப்பற்றி கூறியுள்ளதாவது :—

''கன்னியர் இளைப்பாறும் நேரத்துக்காக நான் எதிர்பார்த்திருந்து அந்த நேரம் வந்தவுடன் கன்னியர்களிடத்தில் மிஷன்களுக்குப் போகும்படி குறிக்கப்பட்டிருக்கிற ஒரு சகோதரியின் பெயரை நீங்கள் ஓர் உத்தேசமாய்ச் சொல்லக்கூடுமோவென்று அவர்களைக் கேட்டேன். அசுன்தாவின் தோழிகள், அசுன்தாவினிடத்திலிருந்த இந்த பெரிதான ஆசையை நன்கு அறிந்தவர்களானதினுல், உடனே அவளுடைய பெயரைச் சொல்லிப்போட்டார்கள். ஆனுல் அசுன்தா அதை நம்பினவளல்ல. மிஷன்களுக்குத் தான் அனுப்பப்படுவது உண்மைதானென்று அவளுக்குச் சந்தேகமற தெரிந்தபிறகு, அவள் மனதில் எழும்பிய சந்தோஷ உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமலிருக்கும்படி என் திருநாளுக்காக அவள் இயற்றியிருந்த செய்யுளின் சில சரணங்களை எவரும் அதிசயிக்கும்படியாக உற்சாகத்தோடும் உவகையோடும் பாட ஆரம்பித்தாள்'' என்பதே.

மற்றச் சகோதரிகள், சிரேஷ்ட தாயார் கேலியாகத்தான் அவளைப்பற்றிக் கூறினுளென்றும், மிஷன்களுக்குப் போவது அவளல்லவென்றும் அவளுக்கு நம்பிக்கையுண்டாகும்படியாகப் பரிகாசம் செய்து அவளோடு வாதித்தார்கள். ஆனுல் அசுன்தா அமரிக்கையாயிருந்தாள்.

''சர்வேசுரனுடைய சித்தத்தின்படியாகக் கடவது. இங்கேயாவது அல்லது மிஷன்களிலாவது வேறு எங்கேயாவது இருந்தாலும் சரி, எனக்கு எல்லாந்திருப்தியே'' என்ருள் அசுன்தா சகோதரி. அவள் சொன்னது உண்மைதானென்று யாவருக்கும் நன்கு விளங்கிற்று. சம்பாஷணை நேரம் முடிந்ததும் சிரேஷ்ட தாயார் அவளைப் பிரத்தியேகமாயழைத்து, ''நமது சகோதரிகள் வேதசாட்சிகளாய் மரித்த இடத்துக்குப் போக உனக்குப் பிரியமா?'' என்று வினவ, அசுன்தா சகோதரி : ''ஆம் தாயாரே, எனக்கு மெத்த பிரியந்தான். ஆனுல், நான் பிளோரென்ஸ் நகரிலேயேயிருப்பது அவருக்குச் சித்தமானுல், அதுவும் எனக்குச் சம்மதமே'' என்று விடைபகர்ந்தாள்.

தேவ சித்தத்துடன் இவ்வளவு உத்தமமான ஒன்றிப்பு அசுன்தா சகோதரியின் மேலான புண்ணியங்களிலொன்ருய்க் காணப்பட்டதுமன்றி, அவளுடைய சீவியத்தின் சகல சந்தர்ப்பங்களிலும் இது விளங்கித் துலங்கிற்று.

S. M.

(தொடரும்.)

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

சமாதானம் நமது வெற்றித்துவஜம்.

கடந்த மே மாதத்து நல்லாயனில், யான் ''வேம்பார் அமலோற்பவ ஜூபிலி கிளப்பும் அதன் முன்னேற்றக் குறைவும்'' என வரைந்து விடுத்த விபாசத்திற்கு, சூன் மாதச் சஞ்சிகையில் நமது சகோதரரிலொருவர், வரைந்த கண்டனத்

தைப்பார்வையிட்டேன். எனது அரிய நேரத்தை வீண் குதர்க்கத்தில் கழிக்கவேண்டுமென்பது எனது விருப்பமல்ல. சமாதானம் உண்டாகி நம் ஜாதி முன்னேற்றம் அடையவேண்டுமென்பதே எனது நோக்கம்.

"சமாதானஞ்செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்பது நமது வேதாசாரமாகையால், சமாதானத்தைக் கெடுப்பவர் நிர்ப்பாக்கியவான்கள் என்பது பெறப்படுகின்றது.

"ஸ்தாபனம் சீர்கெட்டிருப்பதற்குத் தற்சமயம் ஊரிலிருக்கும் ஸ்திதிதான் காரணமென்றூற்போல் ஜாடை காண்பிக்கிறதை யங்கீகரிக்க முடியவில்லை" என்கிறூர் ஷ சகோதரர். யானே இவர் கூறுகிறபடி ஜாடையாக, குறிப்பாகச் சொல்லவில்லை. அதற்கு ஒற்றுமைக் குறைவே காரணம் என வெளிப்படையாகவே எனது முந்திய வியாசத்தில் கூறியுள்ளேன். தற்போதும் ஒற்றுமைக்குறைவே காரணமெனப் பின்னெருமுறையுங் கூறுகின்றேன். "செல்வாக்குள்ள சிலரின் குறுகிய நோக்கம்" "துர்வினியோகம்" "விஷமச்செய்கைகள்" எனப் பலவாறு பேசுகின்றூர் நமது சகோதரர். பாவம்! ஜனசமூக முன்னேற்றத்திற்காக முன்வந்து உழைக்கும் பரோபகாரிகள்மீது பழிசுமத்தி இவ்வித அபவாதத்தைச் சொல்லுவது அழகாமா? தர்மமாமா?

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க் கணி" என்னும் ஆன்றோர் வாக்கை நாம் மறவாதிருத்தல்வேண்டும். கிளப்பின் பொதுநிதியானது ஜனசமூக முன்னேற்றத்திற்காகவே, அக்கிளப்பின் விசாரணைத்தலைவர், சங்கைக்குரிய D. சாமிநாத சுவாமிகள், கௌரவ அங்கத்தவர், சங்கைக்குரிய A. சூசை மாணிக்கநாத சுவாமிகள், காரிய நிருவாக சபைத்தலைவராகிய S. A. அய்யாத்தம்பி தமேல் அவர்கள், உப அதிபர் C. M. விக்டோரியா அவர்கள், காரியதரிசி S. M. தோமாஸ்பிள்ளை அவர்கள் முதலிய காரிய நிர்வாகசபை யங்கத்தினர்களுடைய பொதுச் சம்மதத்தின்பேரிலும், அநுமதியின்பேரிலும் செலவிடப்பட்டதை சகோதரர் அறியாரோ? அறிந்திருந்தும் அது துர்வினியோகஞ் செய்யப்பட்டதெனக் கடுமொழிகளைக்கூறி பரோபகாரிகளாகிய குருப்பிரசாதிகள் முதலான பெரியோர்களைக் குறுகிய நோக்கமுள்ளவரெனத் தூஷித்தல் கொடுமை! கொடுமை!!

ஆகையால் நமது சகோதரரும், அவரைச் சார்ந்தவர்களும் மற்றவர்கள்மேல் குறைகூறி, தோஷங்கற்பித்து உள்ளதையுங் கெடுக்காது, "குற்றம்பார்க்கில் சுற்றமில்லை" யென்பதையும், "எங்கள் கடன்காரர்களுக்கு நாங்கள் பொறுக்குமாப்போல்" என்னும் ஆண்டவர் திருவாக்கையும் சிந்தித்து, சமாதானத்தை நாடி, இனி வேம்பார் அமலோற்பவ ஜூபிலி கிளப்பு நல்ல வேலைசெய்வதற்கும், அதன் மூலமாய் ஊரில் ஒற்றுமையும், ஜனங்களின் அபிவிர்த்தியும், முன்னேற்றமும் உண்டாவதற்கும் அதன் மூலமாய்ச் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்கும் வேண்டிய வழிவகைகளைத் தேடிச் செய்வார்களானல் எவ்வளவோ நலமாயிருக்கும்! இவர்களுக்குள் சர்வேசுரன் சமாதானத்தைக் கட்டளையிட்டருள்வாராக!

இங்ஙனம்,
பரோபகார பரதன்.

[இவ்விஷயத்தைப்பற்றி இனி எக்கடிதமும் பிரசுரிக்கப்படமாட்டாது. ப—ர்.]

கருங்கண்ணி
அர்ச். அந்தோனியார் மஹோற்சவக் கொண்டாட்டம்

சங். பத்திராதிபரே,

இதனடியில் யான் எழுதும் சில வரிகளை உமது அரிய பத்திரிகையின் ஓர் கோணத்தில் பிரசுரிக்குமாறு உம்மைப் பிரார்த்திக்கின்றேன்.

ஏறக்குறைய 50-வருஷங்களுக்கு முன்னே கட்டப்பட்ட கருங்கண்ணி அர்ச். அந்தோனியார் கோவில், நாகப்பட்டணத்துக்குத் தெற்கே 14-மைலுக்கப்பாலுள்ளது. இதைச் சுற்றிலும் ஒன்றுக்கொன்று 2, 3-மைல் தூரம் வித்தியாசமுள்ள 9 கிராமங்களும், ஏறக்குறைய 3,000 கிறீஸ்துவர்களும், சங். மோத்தாவிஸ் சுவாமிகளின் பங்கு விசாரணையைச் சேர்ந்தவர்கள். ஜனங்கள் பெரும்பாலும் பயிரிடும் குடிகள். ஏழைகளாயிருந்தாலும் அடக்கம், ஒடுக்கம், மேரை, மரியாதை, பக்தி, விசுவாசம் முதலிய சற்குணங்கள் பொருந்தியவர்கள்.

சங். M. மோத்தாவாஸ் சுவாமிகளைப்பற்றி சென்னை மைலைக் காட்டுகோவிலென வழங்கும் அர்ச். ஞானப்பிரகாசிமாதாவின் ஆலய 400-ம் வருஷ ஜூபிலி கொண்டாட்ட சந்தர்ப்பத்தில் "நல்லாயன்" சந்தாதாரர்களும், வெளி ஊர

ரும், உள்ளூராருமாகிய அநேகர் அறிந்திருக்கலாம். இவருடைய சாமர்த்தியத்தையுந் திறமையையுங் கண்டறிந்த மைலே மேற்றிராணியார் அவர்கள் மேய்ப்புனில்லாத ஆடுகளைப்போல் சிதறுண்டு கிடந்த 3,000 கிறீஸ்துவர்களையும், 9 கிராமங்களையுஞ் சேர்ப்படுத்த இவரை மேற்கண்ட விசாரணைக்கு முதலாவது பங்கு சுவாமிகளாக நியமித்தார்கள்.

ஷை பதுவைப்பதியரான அர்ச். அந்தோனியார் திருவிழாவானது 1918-ம் வருஷம் மேமீ 28-ம் தேதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஜூன்மீ 9-ம் தேதி முடிவானது. கொடியேற்றஞ் செய்தது முதற்கொண்டு காலையில் பூசையும், மாலையில் பிரார்த்தனையும், அர்ச். அந்தோனியார் சுரூப ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டுவந்தது. 8-ம் தேதி சனிக்கிழமை (Vespers) என்னும் மாலை ஆராதனை வெகு ஆடம்பரமாய் நடைபெற்றபின் சங்கை. இராஜரிஷி நொரொஞ சுவாமிகளால் ஜனங்களுக்கு பக்தி விசுவாசத்தை ஊட்டும்படியான ஒரு அருமையான பிரசங்கம் செய்யப்பட்டது. பிறகு 9-மணிக்கு 5 தேர் சுற்றுப்பிரகாரஞ்செய்த காட்சி சொல்லுந்தரமன்று. நாகப்பட்டணம், வேளாங்கண்ணி, கருங்கண்ணி மற்றும் சுற்றுக்கிராமங்களிலுமுள்ள ஏறக்குறைய 5,000 ஜனங்கள் தேர்களைச் சூழ்ந்து முன்னும் பின்னும் செல்லவும், தேருக்கு முன்னால் மேள வாத்தியங்கள், தஞ்சாவூர் நாகசுரம் பாண்டுவாத்தியங்கள், தாம் தாம், திமிதிமியென்று முழங்கவும், தேருக்குப் பின்னால் சங். நொரொஞ சுவாமிகள் அர்ச். அந்தோனியார்சுரூபத்தைக் கையிலேந்தினவராக,நாகப்பட்டணத்திலிருந்து வரவழைக்கப்பட்ட (Choir Master) பாடகர்களுடன் பிரார்த்தனை ஆவெமரியா என்னும் லத்தீன்பாடல்களைப் பாடிக்கொண்டு ஒரு மைல் தூரம் தேர் சுற்றுப்பிரகாரம் செல்லும்போது, வழி நெடுக பீரங்கி வெடில்களைப்போலொத்த அதிர் வெடிகளும், தீவத்திகள், மத்தாப்பு, பாணம், புருஸ் இவைகளின் ஜோதிப்பிரகாசமும் எங்கும் ஜொலிக்க பரவி 10-மணிக்குமேல் தேர்சுற்றுப்பிரகாரம் முடிந்தது.

9-ம் தேதி ஞாயிறு காலை முதல் பூசை சங். நொரொஞ சுவாமிகளாலும், இரண்டாவது பாடல் பூசை டீக்கன் சப் டீக்கன்மார்களுடன் சங். மோத்தாவாஸ் சுவாமிகளாலும் வெகு ஆடம்பரமாய்ச் செய்யப்பட்டது. நாகை (Choir Master) திருநாளுக்கென்று குறிக்கப்பட்டிருந்த அருமையான பாட்டுகளைத் தம் பாடகர்களோடு ஜனங்களுக்கு மனோரம்மியமாய்ப் பாடினார்கள். பல நூற்றுக்கணக்கான ஜனங்கள் திவ்யசற்பிரசாதம் உட்கொண்டார்கள். பூசை முடிவில் திவ்யநற்கருணை ஆசீர்வாதங் கொடுக்கப்பட்டது. அன்று பூசையில் உபயோகித்த பூசை உடுப்புகள், பாத்திரங்கள் முதலிய பொருட்களும், சங். மோத்தாவாஸ் சுவாமிகளின் சொந்த பிரயாசையாலும், தளரா ஊக்கத்தாலும் புதிதாகக் கொள்ளப்பட்டது.

இந்த நல்ல சுவாமியார், தமக்குப் பெரியோர்களால் நியமிக்கப்படும் எந்த வேலையானாலும் சரி அது எவ்வளவு பிரயாசையானாலுஞ் சரி, பிரயாசைக்கஞ்சாமல் தம்மாலானமட்டும், உழைத்து அதைச் செம்மையாய்ச் செய்து முடிக்கும் தன்மையுடையவர். சர்வேசுரன் இவருக்கு நீடிய ஆயுளையும் பூரண சுகத்தையும் பெலனையும் தந்து காப்பாற்றி இரட்சிப்பாராக.

சென்னை, தேனாம்பேட்டை, 20—6—1918. C. V. T.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

பிரின்ஸ் ஆப் வேல்ஸ்.—நமது சக்கரவர்த்தியவர்களின் சிரேஷ்ட குமாரராகிய இவர் சமீபத்தில் உரோமாபுரி சென்று அர்ச். பாப்பானவருடைய பேட்டி பெற்றார்.

ஜேர்மன் இராஜவங்கிஷம்.—நிகழும் யுத்தந் தொடங்கினது முதற்கொண்டு 30 பேர் வரையிலும் இவ்வங்கிஷத்தில் இறந்துபோயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட கத்தோலிக்கர்.—1,32,92,254 பெயரென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது ஆசியா கண்டத்தில் மாத்திரம் 2,30,000 பேரிருக்கிறார்கள்.

அமேரிக்கா தேசாதிபதி.—இவர் கல்விச்சாலைகளில் போதனசிரியர்களாயிருக்கும் சந்நியாச சபையார் இத்தேசத்து சர்க்கார் சட்டப்படி யுத்தத்துக்குப்போக வேண்டியதில்லையென்று விளம்பரஞ் செய்திருக்கிறாராம்.

இத்தாலியா தேசத்தின் ஜனத்தோகை.—இத்தேசத்தில் மூன்றுகோடியே அறுபத்தைந்து இலட்சம் ஜனங்களிருக்கிறார்கள். இவர்களுக்குள் இலட்சத்து இருபத்து மூவாயிரம்பேர் புரோடஸ்டாண்டர் ஆவர். மீதியாயிருக்கப்பட்டவர்கள் கத்தோலிக்கர்.

ஜேருசலேம்.—இந்நகரிலுள்ள திருஸ்தலங்கள் பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட ஒரு ஐரிஷ் கத்தோலிக்குப் பட்டாளத்துக்கு ஆங்கிலேயர் தாக்கீது செய்திருக்கிறார்களென்றும், பலஸ்தினா நாட்டிலுள்ள சகல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் பரிசுத்த பாப்பானவரை பரிபாலராகத் தெரிந்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறார்களென்றும் மேனாட்டுப் பத்திரிகைகளிற் சொல்லப்பட்டிருக்கிறது.

பெட்ரோகிராட்.—ருஷியாவின் தலைநகராகிய இந்நகரம் தற்போது ஒரு பெருங்காடாகி வருகிறது. ஏனெனில், ருஷியர் ஜெர்மனியரோடு உடன்படிக்கை செய்துகொண்டதிலிருந்து அவர்களுக்குள் பல குழப்பங்களும் புரட்சிகளுமுண்டாகி சமாதான மற்றிருப்பதுடன், அங்கங்கே கொலையும் கொள்ளையும் ஏற்பட்டிருப்பதினாலும், ஜெர்மனியர் அநேக பட்டணங்களைத் தங்களுக்கு ஆதீனம்படுத்திக்கொண்டதினாலும் ஷை நகரவாசிகள் பயந்து அதை விட்டுவிட்டுப் பல விடங்களுக்கு ஓடிப்போகிறார்கள்.

அமேரிக்க கத்தோலிக்கர்.—இவர்கள் யுத்தக்களத்தில் போர்புரியும் தங்களுடைய போர்வீரர்களின் ஆத்தும காரியங்களை விசாரிக்கும் நிமித்தம் 365 குருக்களை தங்களுடைய தேசத்திலிருந்து அனுப்பியிருக்கிறார்கள். அல்லாமலும், திவ்ய பலிப்பூசையை நிறைவேற்ற அத்தியாவசியமாய்க் குருக்களுக்கு வேண்டியிருக்கும் அர்ச்சியசிஷ்டகற்கள் விஷயமாய் அவர்களுக்கு யாதோர் குறைவுமுண்டாகாதபடி 4,755 கற்களை அனுப்பியிருக்கிறார்கள்.

ஏழைகளின் சிலுவை சகோதரிகள்.—சின்ன ஆசியாவிலுள்ள மகமதிய பட்டணமாகிய பஸ்ராவைப்பற்றி, விசேஷமாய் இந்த யுத்தகாலத்தில், கேள்விப்படதார் அனேகரிரார். இவ்விடத்தில் ஷை சபைக் கன்னியர் ஏழை எளியவர்களையும், சண்டையில் காயம் பட்டவர்களையும் பராமரிப்பதில் அலுவலாயிருக்கிறார்கள். இவர்கள் இவ்வலுவலை எவ்வளவு ஆவலோடும் அன்போடும்செய்துவருகிறார்களென்றால், இவர்கள் இப்பட்டணத்து வீதிகளின் வழியாய்ப் போகும்போது மகமதிய ஸ்திரீகளும் சிறுவர்களும் ஓட்டமாய் ஓடிவந்து இவர்களைச் சூழ்ந்துகொண்டு, இவர்கள் கைகளை மிக்கவிநயமாய்ப் பிடித்து முத்தி செய்கிறார்களாம். யுத்தந் தொடங்குவதற்முன் குருக்களையும் கன்னியர்களையும் புறக்கணித்து இகழ்ந்துபேசின இவர்கள் இப்போது அவர்களை அவ்வளவாகக் கனப்படுத்துவதற்குக் காரணமென்ன? நமதாண்டவரான சேசுநாதசுவாமி நம்மெல்லோருக்கும் படிப்பித்திருக்கிறசிறந்த புண்ணியமாகிய பிறர் சிநேகமே காரணமன்றி வேறென்ன?

15-ம் ஆசீர்வாதப்பரும் துருக்கி சுலுத்தானும்.—நமது பரிசுத்த தந்தை 15-ம் ஆசீர்வாதப்பர்மட்டில் துருக்கி சுலுத்தானுக்கு நல்ல அபிமானமுண்டென்று பின்வருவதினால் விளங்கும். ஐக்கிய கட்சிக்காரரைச்சேர்ந்த ஆங்கிலேயரும் பிராஞ்சுக்காரரும் துருக்கியிற் சிறைப்பட்டிருக்கும் தத்தம் போர்ச்சேவகர்களின் சவரட்சணை சம்பந்தமாய் சுலுத்தான் அவர்களுக்கு எழுதிக்கொள்ள, அதை அவர் இலட்சியஞ் செய்தவரல்ல. ஆனால் பரிசுத்த தந்தையாகிய பாப்பானவர் அது விஷயமாய் எழுதிக்கொண்டவுடனே சுலுத்தான் அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டாராம்.

சுருட்டு நெருப்பு செய்த வேலை.—ஐரோப்பிய துருக்கியின் ராஜதானியாகிய கான்ஸ்டான்டிநோபில் என்னும் நகரத்திலே தீ பிடித்து சென்ற மேமீ 31-ம் தேதி தொடங்கி மூன்று நாள் வரைக்கும், 5,000, வீடுகள், 20 ஸ்நான கட்டங்கள், 12 கடைகள், 10 மசூதிகள் ஆகிய இவைகளை எரித்துச் சாம்பலாக்கிவிட்டதாம். இருநூறுயிரஞ் ஜனங்கள் இருக்க இல்லிடமின்றி தவிக்கின்றனராம். இவ்வளவும் யாருடைய வேலை? வாயினின்று எடுத்தெறியப்பட்ட ஒரு சிறு எச்சிற் சுருட்டினுடையதாம். அற்ப ஹேதுவாயிருந்தாலும் அது செய்துவிட்ட வேலை அபாரமானது. அற்பத்தை அற்பமாக வெண்ணி

விடப்படாது. அற்பத்தையும் அதற்கேற்றவாறு நடத்தித்தா னுகவேண்டும்; அல்லாவிட்டால் அற்பம் ஆபத்தாய் முடியும் என்பதற்கு மேலே சொல்லப்பட்டது பிரத்தியட்ச அத்தாட்சி.

யுத்தமும் பாப்பானவரும்.—நிகழும் இக்கொடிய யுத்தம் முடிவாக சென்ற மீ 29உ அர்ச். இராயப்பர் சின்னப்பர் திருநாளன்று உலகத்திலுள்ள நான்கு இலட்சம் கத்தோலிக்குக் குருக்களும் அர்ச். பாப்பானவருடைய உத்தரவின்படி திவ்ய பூசைப்பலியை ஒப்புக்கொடுத்திருப்பார்களென்பதற்கையமில்லை. உலகத்தை நாசமாக்கிக்கொண்டு வரும் இந்த யுத்தந் துரிதத்தில் முடிந்து நீதியும் சமாதானமுமேற்பட சர்வேசுரன் கிருபைபுரிவாராக.

நாக்ஸ் பாதிரியார்.—இவர் கத்தோலிக்கு வேதத்தை வெகுவாய் வெறுத்து வந்த மான்செஸ்டர் புரோடஸ்டான்டு மேற்றிராணியாரின் சிரேஷ்ட குமாரர். இவரை இவருடைய தகப்பன் சிறுபிராயத்திலிருந்து பாதிரியார் பட்டத்துக்குப் படிக்கவைத்தார். இவரும் தம்முடைய படிப்பை முடித்து 1911-ம் ௵த்தில் பாதிரியாராகி சென்ற ஏழு வருஷங்களாய்த் தம்முடைய பாதிரி அலுவலைப் பார்த்துவந்தார். ஆனால் சமீபத்தில் மனந்திரும்பி கத்தோலிக்கராகிவிட்டார். இவர் குருப்பட்டத்துக்குப் படித்து குருவாவாரென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவர் கத்தோலிக்கரானதைப்பற்றி இவருடைய தகப்பனர் மிகவும் விசனத்துக்குள்ளாயிருக்கிறாராம்.

பெல்ஜியத்தின் கர்தினலாகிய மி. வ. மேர்சியர் ஆண்டவர்—ஜெர்மனியர் பெல்ஜியத்தில் தங்கள் வசமாக்கிக்கொண்டிருக்கும் நாடுகளிலுள்ள தேவாலயங்களின் மணிகளையும், ஆர்கன் முதலிய கின்னரப்பெட்டிகளையும் வெடி குண்டுகள் செய்வதற்காகத் தங்கள் தேசத்துக் கனுப்பும்படி ஓர் உத்தரவு செய்தார்கள். இவ்வுத்தரவின் விஷயமாய் ஷெ கர்தினல் ஆண்டவர் பெல்ஜிய நாட்டின் குருக்களுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் ஓர் அப்போஸ்தோலிக்கு நிருபம அனுப்பி, கோவில் மணிகள் திருச்சபையினல் அபிஷேகஞ் செய்யப்பட்ட பொருட்களாதலால், அவைகளை வேறு வேலைகளுக்கு உதவிக்கொள்வது தேவதுரோகமென்றும், ஆனபடியால் அவைகளைக் கீழே இறக்கக்கூடாதென்றும், கீழே இறக்க உதவி முதலாய்ச் செய்யக்கூடாதென்றுங் கற்பித்திருக்கிறார்.

சங். துருஹேன் சுவாமிகளின் தேகவியோகம்.—இவர் புதுவை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த மஞ்சகுப்பம் உத்தரிய மாதா கோவில் பங்கு சுவாமியாராவர். சென்ற 21 வருடங்களாக ஷெ மேற்றிராசனத்தில் கல்விச்சாலைகளிலும், குருப்பட்டத்துக்குப் படிக்கும் மாணவர்கள் மடத்திலும், பல பங்குகளிலும் மிக்க மெச்சத்தக்கவிதமாய் இவர் உழைத்துள்ளார். மேலும், இவர் பாடுவதிலும் கின்னரம் வாசிப்பதிலும் தேர்ந்த பண்டிதர். ஆத்தும இரட்சண்ணிய அலுவலிலும், ஏழைகளின் முன்னேற்றத்திலும் இவருக்கிருந்த ஆவலும் அக்கரையும் சென்ற 10-வருடங்களாக மஞ்சகுப்பத்தில் இவர் செய்து வந்த பல பரோபகார கிருத்தியங்களினல் பிரத்தியட்சமாக விளங்கும். ஏழைப் பிள்ளைகளின் கல்விக்காக ஓர் முதற்றரமான பிரைமரி பாடசாலையும், ஓர் கைத்தொழிற்சாலையும், நேர்த்தியான பாண்டு வாத்திய செட்டொன்றையும் ஏற்படுத்தியுள்ளார். அவைகளை ஏற்படுத்தி நடத்திவந்ததில் இவருக்குண்டான மிஞ்சின பிரயாசையும், அதி ஊக்கமுமே இவர் அசௌக்கியமுற்று தம்முடைய 46-வது பிராயத்தில் பெங்களூர் மார்த்தா ஆஸ்பத்திரியில் அகால மரணமடைய காரணமாயிற்று. இவருடைய மரணத்தினல் புதுவை அதிமேற்றிராசனத்துக்கு நேர்ந்த நஷ்டத்துக்காக அநுதாபப்படுகிறோம். சர்வேசுரன் இவருடைய ஆத்துமத்துக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளுவாராக.

கொள்ளையடித்தல்.—இஃது கர்நூல் ஜில்லாவைச் சேர்ந்த சில விடங்களில் மும்முரமாய் நிகழ்ந்துவருவதாகத் தெரியவருகிறது. சமீபத்தில் நொஸ்ஸாம், சாகலமாரி, ஆர்லகட்ட, ஜம்புலதிண்ணே முதலிய கிராமங்களிலுள்ள சில வீடுகளில், விசேஷமாய் கோமுட்டிகளின் வீடுகளில், கொள்ளைக்காரர்கள் நுழைந்து சுமார் 25 ஆயிரம் ரூ பெறுமான சொத்துக்களையும், தானியதவ

சங்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டார்கள். மேற்படி ஜில்லாவைச் சேர்ந்த ஒன்றெத்துபல்லே எனும் இன்னொரு கிராமத்துக்கும் சுமார் 30 பேர் கொள்ளைக்காரர் ஓர் நாள் நடுராத்திரியில் வந்து, தானிய களஞ்சியங்களுள்ள வீதிகளில் நடமாடிக்கொண்டிருப்பதை அறிய வந்த அவ்வூர் பங்கு சுவாமியார் தம்முடைய துப்பாக்கியைக் கெட்டித்து இரண்டோர் வெடிகளைப் போடவே, அவர்களெல்லோரும் பயந்து ஓட்டம் பிடித்தார்களாம். இந்த ஜில்லாவில் இப்படியாக கொள்ளையாடுதல் நிகழ்ந்துவருவதன் காரணம் இன்னதென்று திட்டமாய்ச் சொல்வதற்கில்லை. ஆயினும், இப்போது நிகழும் உணவுப்பொருட்களின் விலையேற்றமே இதற்குக் காரணமென யூகிக்கலாம்போலும்.

ஒரு பெரிய அநீதம்.—ஜெர்மனியர் தங்களுடைய பிரமாண்டமான பீரங்கிகளை பிராஞ்சுதேசத்தில் தற்காலம் நடைபெற்று வரும் சண்டையில் உபயோகிக்கிறார்கள். இதனால் அநேக சிறந்த தேவாலயங்கள் இடிந்து தகர்ந்துபோகிறது மல்லாமல், அவ்வாலயங்களில் தேவாராதனை செய்து கொண்டிருக்கிறவர்களுக்குள் அநேகரும் காயப்பட்டு இறந்துபோகிறார்கள். இவ் வருஷம் பெரிய வெள்ளிக்கிழமையன்று பரீஸ்பட்டணத்தின் ஓர் ஆலயத்தில் ஜனங்கள் கூடி ஜெபித்துக்கொண்டிருக்கையில் 70 மைல் தூரத்திலிருந்து உபயோகிக்கப் பட்ட ஒரு பெரிய பீரங்கியின் குண்டு அந்த ஆலயத்தின்மேல் விழுந்து, அதை நாசப்படுத்தி 70 பேரைக் கொன்று அநேகம்பேரையுங் காயப்படுத்திவிட்டது. இதென்ன அநீதம்!

இந்தியன் கத்தோலிக்கு சங்கம், பர்மா.—இச்சங்கத்தின் ஐந்தாவது வருஷாந்தப் பொதுக் கூட்டம், சென்ற மேமீ 19-ம் தேதி இரங்கூனில், பாரிஸ்டர் ஸ்ரீமான் ஏ. பர்னபாஸ் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கூட்டத்திற்கு 35 அங்கத்தினர் விஜயஞ் செய்தனர். காரிய தரிசி, மிஸ்டர் எக்ஸ். பிரான்சிஸ் பீ. ஏ. சங்கத்தின் 1917-18-வது வருஷத்திய விருத்தாந்த விளம்பரத்தையும், வரவு செலவு கணக்குகளையும் அங்கத்தினருக்குச் சமர்ப்பித்தார். 1918-19 வருஷத்துக்கு சங்கத்து நிர்வாக சபை உத்தியோகஸ்தர்கள் தெரிந்து கொள்ளப்பட்டார்கள். சங்கம் சென்ற வருஷத்தில் அடைந்த விருத்தியைப் பற்றியும், அங்கத்தினருக்குள்ளிருக்கும் ஒற்றுமை, உடனுழைப்பு, உற்சாகம்முதலியவற்றைப்பற்றியும்சிலாக்கித்துப்பேசி, இவைகளை இன்னும் அதிகமாய் விருத்திசெய்து, இந்தியன் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள், கல்வி, நன்னடக்கை,கூட்டுறவுமுதலியவைகளில்அதிக அபிவிருத்தி யடையவேண்டுமென வற்புறுத்திப் பேசினர் அக்கிராசனாதிபதி.பிறகு அங்கு விஜயஞ் செய்திருந்தவர்களுக்கு சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டு, ராஜவாழ்த்துப் பாடலுடன் கூட்டம்முடிவுபெற்றது.

"நல்லாய" னின் நஷ்டப்பரிகார நிதி.—இது சம்பந்தமாய் நாம் சென்றமாதத்து சஞ்சிகையில் வைத்தனுப்பிய மனுவைப் பற்றி ஓர் நண்பர் நமக்கு அநுதாபக் கடிதமொன்று எழுதியுள்ளார். அவர் கொடுத்தது கொஞ்சமேயாயினும், எழுதியுள்ள அன்பும் அநுதாபமுமான வசனங்களுக்காக அவருக்கு நாம் நன்றியறிந்திருக்கிறோம். அவர் பின்வருமாறு எழுதுகிறார்:—"ஜூன் மாதப் பத்திரிகையிலிருந்த 'பத்திரிகை நேயர்களுக்கு ஓர் வேண்டுகோள்' என்னும் அநுபந்தத்தை யான் முற்றிலும் வாசித்து மிக்க சஞ்சலமடைந்தேன். அதாவது, இப்போது ஏறக்குறைய நாலு வருடமாக, ஐரோப்பா தேசத்தில் யுத்தந் தொடங்கின நாள் முதற்கொண்டு சகல சாமான்களின் விலையும் அபாரமாய் ஏறிக் கொண்டுவந்தும், நீர் நல்லாயன் சந்தாவை சற்றும் உயர்த்தாமல், பழயபடியே இது மட்டும் முறையிடாமல் பத்திரிகையை எல்லோருக்கும் சகாயமாக நடத்தினதினாலே இப்போது அபாரமான கடன் உமது பேரில் சுமந்திருக்கிறது. இத்தோடு சென்ற வருடத்திலும் அதற்கு முந்தின வருடத்திலும் ஏறக்குறைய இருநூறு,முந்நூறு சந்தாதாரர்கள் தங்கள் பத்திரிகையை வருட முழுதிலும் பெற்றுக் கொண்டு தங்கள் சந்தாவைச் செலுத்தாததினாலே நீர் அவர்களுக்குப் பத்திரிகையை நிறுத்திவிட்டீர். இதனாலும் உமக்கு நஷ்டமதிகம். இது சந்தாதார நண்பர்களெல்லோரும் விசனிக்கத்தக்க விஷயம். ஆயினும், இதைக் கவனிக்கிறவர்கள் சிலரே; கவனிக்காதவர்கள் அநேகர். ஆனபடி

யால், உமது வேண்டுகோளின்படி சந்தாதாரரனைவோரும் உமக்குச் சிறு உதவி புரிவாரானால், நமது "நல்லாயன்" பத்திரிகை எந்நாளும் கைசோராமல் செழிப்புற்றோங்கும். இதனோடு நான் அனுப்பும் சிறு தொகையை அங்கிகரிக்க வேண்டுகின்றேன்."

எமது வேண்டுகோளுக் கிணங்கி "நல்லாய"னின் நல்லிருப்பைக் கோரி நன்கொடையளித்த பரோபகாரிகளுக்கு நாம் பெரிதும் நன்றியறிந்திருக்கிறோம். அவர்களுடைய நாமதேயங்கள் பின்வருமாறு:—

Mr. J. S. பிரான்சீஸ் பிள்ளை, கல்கத்தா	... 2—0—0
,, A. Simon Pillai, ஐதராபாத், *(Deccan)*	... 0—8—0
,, C. S. குருசாமி பிள்ளை, தலைமங்கலம் ...	... 1—0—0
,, P. A. துரைசாமி பிள்ளை, நந்திதுருகம் ...	... 1—0—0
,, ஜான் பிள்ளை ...	... 0-10—0
J. E. P. (சேசுசபை) திருச்சிராப்பள்ளி ...	... 1—0—0
ஆக மொத்தம்	... 6—2—0

கத்தோலிக்குக் கோவாப்பரேடிவ் கிரடிட் சொஸைட்டி, பெங்களூர்.—இச்சங்கத்துக் காரியதரிசியிடமிருந்து இதன் முதலாவது வருஷ விருத்தாந்த அறிக்கைப் பத்திரத்தின் நகலொன்று வந்தனத்துடன் வரப்பெற்றோம். அதிலிருந்து பின் கண்ட விவரங்கள் எடுக்கலானோம்:—"பெங்களூர், அர்ச். அன்னம்மாள் மதுவிலக்கு சபையாரால் 1917ஸு ஜனவரிமீ முதற்றேதியிலிருந்து ஆரம்பித்து நடத்தப்பட்டு வந்த ஷை சங்கம் 1917ஸு ஏப்பிரல்மீ 22-ம் தேதி அங்கத்தினர் கூடிய பொதுக் கூட்டத்தின் தீர்மானப்படி, அதுவரையில் நடத்திவந்த கமிட்டியாரின் நிர்வாகத்தில் ஒப்புவிக்கப்பட்டது. தற்காலம் இச்சங்கத்திலிருக்கும் அங்கத்தினர்கள் 309 பேர், ஷேர்கள் 1,168. இச்சங்க நிதியிலிருந்து சென்ற வருஷத்தில், அங்கத்தினர்களுக்குக் கொடுபட்ட கடன் விவரம் பின்வருமாறு:—பழைய கடனைத் தீர்க்க ரூ 4,642; கலியாணங்களை நடத்த ரூ 2,330; வீடுவாங்க அல்லது மராமத்து செய்ய ரூ 1,450; விவசாயத்துக்காக ரூ 300. எல்லா செலவும் போக, வந்த லாபம் ரூ 688. இதில் ரூ 172 க்ஷேம நிதியில் சேர்க்கப்பட்டது. ரூ 50 அர்ச். இராயப்பர் அணுவுக்காகவும், ரூ 52 எளிய மாணுக்கர்களின் கல்விக்காகவும், ரூ 10 மரித்த அங்கத்தினருக்கு பூசைக்காகவும், ரூ 259 மிஸ்ஸலேனியஸ் பண்டுக்காகவும், மீதியான ரூ 145 அங்கத்தினருக்கு டிவிடெண்டாகவும் கொடுக்கப்பட்டது. இதுவரையில் சேர்ந்திருக்கும் மூலதனம் 6,000. ஷேர் ரூ 5 விழுக்காடு இன்னும் 3,832 ஷேர்கள் சேரலாம்."—இச்சங்கத்துக்கு இது தொடங்கிய முதல் வருஷத்திலேயே செலவெல்லாம் போக 100 க்கு ஏறக்குறைய 12 இலாபங் கிடைத்திருக்கிறதினால், இது வெகு சாமர்த்தியமாய் நடத்தப்பட்டு வந்திருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. யாதோர் அவசியத்துக்காக கடன்வாங்க நெருக்கப்படுங் கத்தோலிக்கர் மார்வாடிகள்போன்ற அநியாய வட்டி வாங்குபவரிடம் பணம் கடன் வாங்கிக் கெட்டுப்போகாவண்ணம், அத்தகையோருக்கு தருமவட்டிக்குப் பணம் கொடுத்து உதவும் பொருட்டு ஷை சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் நமது கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் இன்னும் அதிகமதிகமாய்ச் சேர்ந்து நன்மையடைந்துய்வார்களெனக் கோருகிறோம்.

பரீஸ் அன்னிய தேசத்து போதகர் சபை.—இச்சபை குருக்கள் 1,250 பேர் இந்தியா, பர்மா, சீனு, பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களில் சத்தியவேதத்தைப் போதித்துவருகிறார்கள். இவர்களோடு 1,008 சுதேசக் குருக்களும் 6,500 கன்னியர்களும் உழைத்துவருகிறார்கள். இவர்களால் கண்காணிக்கப்படும் கிறீஸ்துவர்கள் 16 இலட்சம் பேர்,

நியூயார்க்.—அமெரிக்காவிலுள்ள இந்நகரில் பதினெட்டு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து ஐஞ்ஞூறு கத்தோலிக்கர்களிருக்கிறார்கள்.

மனந்திரும்பல்.—சென்ற வருஷம் அமெரிக்காவில் சுமார் ஐம்பதினாயிரம் புரோட்டஸ்டண்டார் மனந்திரும்பி கத்தோலிக்கராயினர்.

இத்தாலிய குருக்கள்.—நிகழும் யுத்தத்தை முன்னிட்டு இத்தாலிய படையில் 18-ஆயிரம் குருக்களிருக்கிறார்கள். இவர்களுககுள் 17-ஆயிரமபேர் போர்ச்சேவகர்களாய்ப் போர்புரிகிறார்கள். மீதியான ஆயிரம்பேரும் போர்ச்சேவகர்களின் ஆத்தும குருக்களாயிருக்கிறார்கள்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

தூத்துக்குடி.

"என் சிநேகிதர்களே நீங்களாவது என் பேரில் இரக்கமாயிருங்கள்."

சிங்கராயப் பெர்னாந்தீஸ் அவர்கள் கொஞ்சகாலமாக அசௌக்கியமுற்றிருந்து எவ்வித சிகிச்சைக்கும குணப்படாமல் சென்னைக்குச் சென்று அவ்விடத்தில ஆங்கிலேய வைத்தியர்களையும், யூனானி வைத்தியர்களையும் கொண்டு சிகிச்சை செய்துபார்த்தும் பயன்படாமல், மறுபடியும் இவ்விடம் வந்து மேமீ முதல் வெள்ளி, சனிக்கிழமைகளில் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணி தேவநற்கருணை உட்கொண்டு கடைசி தேவத்திரவிய அநுமானங்களையும் பெற்று, 13௳ திங்கட்கிழமை காலை 1-மணிக்குத் தன் மனைவி, ஐந்து மக்கள், குடும்பத்தார் அனைவரையும் பரதவிக்கவிட்டுப் பரலோக பிராப்தியாயினர். ஐயோ, பரிதாபம்! சகல ஜனங்களும் மெச்சத்தகும்படியாய்க் காலஞ்சென்றவரின் தமையனார் ஸ்ரீமான் சூசை பெர்னாந்தீஸ் இவரை நல்லடக்கம சிறப்பாய்ச் செய்தார். இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக நாளது மீ 10௳ ஒப்பீசும், 11௳ காலை 6½-மணிக்கு ரெக்வெம் பூசையும் சேசு மரியாயின் திரு இருதயக் கோவிலில் இறந்தவரின் மனைவியினால் செய்விக்கப்பட்டது. இவர் தெய்வ பக்தியுள்ள உத்தம கத்தோலிக்கர். இதை வாசிக்கும் சகலரும் இவருடைய ஆத்துமத்துக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

13—6—1918. ஓர் அநுதாபி.

பழையகாயல்.

எனது மைத்துனன், சூசை பூரண ஆரோக்கியப் பர்னாந்துவின் மனைவி, மரிய சேசு டிவயாள் பர்னாந்து கொறேறா, விஷசுரத்தால் பீடிக்கப்பட்டு, எவ்வித சிகிச்சைகள் செய்தும் சுகப்படாமல நாளது மாதம் 18-ந் தேதி சனிக்கிழமை பகல் 2-30 மணிக்கு, தனது பத்தாவையும், மற்றும் பந்துக்களையும் பரிதவிக்கவிட்டு பரமபதம் சேர்ந்தாள். இதைக் கண்ணுறும் சகோதரர் சகோதரிகளை இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ள மிகத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிற,

29—5—1918. பி. எஸ். தமேல்.

தூத்துக்குடி.

இலங்கையைச் சேர்ந்த கல்துறை சந்தக் குருஸ் கலாசாலையில் போதனாசிரியராயிருக்கும ஸ்ரீமான் குருஸ் முறாயிஸ் அவர்களின் அருமைப் புத்திரியும், கொல்லத்தில் ஸ்ரீமான் T. N. மோத்தா அவர்களின் உப்பு ஏஜெண்டாக இருக்கும் ஸ்ரீமான் ராஜேந்திரம் பருனாந்து அவர்களின் நேசப் பத்தினியுமான ஸ்ரீமதி விறிச்சித்தம்மாள் முறாயிஸ் தனது அகால பிரசவத்தால் ஏற்பட்ட கொடிய சுரத்தால் பீடிக்கப்பட்டு எவ்வித ஔஷதங்களுக்கும் குணப்படாமல் சகல தேவத்திரவிய அநுமானங்களையுங் குறையறப்பெற்று நிகழ் வருஷம் மேமீ 19௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 4½ மணியளவில் தனது நேச பத்தாவையும் இரு குழந்தைகளையும் இன்னும் பெற்றோர் பந்து மித்திரர்களையும் இப்பூவுலகில் பரிதவிக்கவிட்டு, தனது 23-வது பிராயத்தில் விண்ணுலகம் ஏகினள். மறுநாள் மாலை 4-மணிக்கு சங். ஜோசப் சுவாமிகள், சங். லூக்காஸ் சுவாமிகள், சங். மெர்சலின் சுவாமிகள் மூவரும் அந்த அம்மாளின் சடலத்தை அர்ச். செபஸ்தியார் தேவாலயத்தில் வைத்து (Office) ஒப்பீஸ் பாடியபின் கொல்லம் அர்ச். பேதுரு மையவாடியில் அது நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இதைக் கண்ணுறும் நேயர்கள் இவ்வாற்றும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

8—6—1918. ஓர் அநுதாபி.

தூத்துக்குடி.

எங்கள் பிரிய தாயார் மரிய நசரேத்தாள் முத்துப்பிள்ளை பெறுனாந்தீஸ் றோச்ச அவர்கள் மூகவாத ஜன்னியால் பீடிக்கப்பட்டு இன்று பகல் 12-மணிக்குப் பரலோக பிராப்தியான பரிதாபமான துக்கசெய்தியை இத்தால் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதுடன் அவ்வாறறும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

29th May, 1918. இங்ஙனம்,
No. 7. மாதாவை இழந்து
South Emperor பரிதவிக்கும்
Street, J. F. FERNANDEZ.
Tuticorin. S. J. FERNANDEZ.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவை யென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,148—15—0 இத் தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

		ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை ...	...	1,418	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (ஜூன் மீ த்துக்கு) ...	...	30	0	0
	ஆக மொத்தம்	1,448	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ, North Georgetown, Madras, E.



இதுவே தக்க சமயம்! விலையும் சரசம்!!
நாள் செல்லச் செல்ல விலையும் அதிகமாகும், ஆகையால் முந்துங்கள்.

வெள்ளை டுவில் கமிஸ், காக்கி டுவில் கமிஸ் ஒன்று ரூ 1¾, 2, 2⅛. கோடுவிழுந்த கலர் கமிஸ் ரூ 2, 2¼, 2½, 3. வெள்ளை ஸ்டிப் காலர், சாப்ட் போலோ காலர், டஜன் ரூ 4¼. வெள்ளை கைகுட்டைகள், டஜன் ரூ 2½, 2¾, 3. கலர்கரை கைகுட்டைகள் டஜன் ரூ 4½. வெள்ளை பனியன் ஒன்று அணா 14, ரூ 1, 1½, 2, 2½. போ, டய், ஆன்கர் டய், நெட்டிங் டய் ஒன்று அணா 12, ரூ 1, 1½ 2, 2½. கிரேப் பனியன் ஒன்று அணா 14, டுவில் வெள்ளை மப்லர் ஒன்று அணா 8, 10. மேஜோடுகள், ஜதை அணா 12, ரூ 1, 1½, 2. பெல்ட் லெதர் கிரிஸ்டிகேப் ரூ 2-அணா 12, ரூ 3-அணா 14. கல்கத்தா அமண்டாபேட் நேர்த்தியான 6, 6½ முழம் கரை வேஷ்டிகள் ஜதை ரூ 5½, 6, 6½. சாய வேஷ்டிகள் ஜதை ரூ 4¾, 5, 5½, 6. வெள்ளை சரிகை அங்கவஸ்திரம், தலைகுட்டை ஒன்று ரூ 7 முதல் 15 வரையிலும். கொரனாட் பட்டுசேலைகள் 27 ரூ முதல் 45 வரையிலும், கொரனாட்டுதுணி சேலைகள் ஒன்று ரூ 9 முதல் 12 வரையிலும். இங்கிலீஷ் சீட்டிசேலைகள், புட்டாசேலைகள், சிகப்பில் கரை நீலம் கட்டிய சேலைகள் ஒன்று ரூ 7, 8. வெகு நேர்த்தியான கல்கத்தா கரை வெள்ளை சேலைகள் ஒன்று 4, 4½, 5. அமண்டாபேட் சேலை ரூ 6, 6½ மதுராசில் நெய்யும் பட்டும் நூலும் கலந்த வாழைப்பூசேலை பட்டுமுந்தாணி ரூ 9½. டைமன்கோடு சேலை ரூ 9½. சிலேட்கலர் சேலை ரூ 9. வெங்காயசேலை ரூ 9. கருப்பு சேலை முந்தாணி பட்டு ரூ 9½. நயமான சேலை, ரூ 6, 6½, 7, 8, 8½. பனாரஸ் பட்டுசேலைகள் ஒன்று ரூ 28 முதல் 50 வரையிலும். கல்கத்தா பம்பாய் பட்டுசேலை ரூ 25, 30, 35. புதுச்சேரி பட்டுசேலை ரூ 18, 20, 21. புதுச்சி பட்டுகுட்டை ரூ 5½. பெங்களூர் குட்டை பட்டு 5½ முழம், ரூ 12, 15. கல்கத்தா வெள்ளை பட்டு அங்கவஸ்திரம் 6 முழம் ரூ 12. நரை ரோமத்தை கருமையாக்கும் (மார்னிங்ஸ்டார் என்னும் கருப்பு பக்ஷபம்) பெட்டி ரூ 1. பாடசாலைக்குவேண்டிய நோட் புஸ்தகம், டிராயிங் புஸ்தகம், பென்சல், ரப்பர், மைபுட்டி, பேனா இவைகள் டஜனாகவும் கிரோசாகவும் அனுப்பப்படும். வேதசாமான்கள் :—இருதய ஆண்டவர், தேவமாதா, குழந்தையோடு மாதா, சூசையப்பர், அந்தோனியார், லூர்துமாதா சுரூபம் 16 இன்ச் ரூ 10. 1 அடி ரூ 6. 8 இன்ச் ரூ 3 ¾. 6 இன்ச் ரூ 2-அணா 2. இருதய ஆண்டவர் போட்டோ படம் 10″ × 12″ ரூ 2. இருதய ஆண்டவர் போட்டோ புஸ்தக படம் டஜன் அணா 11. குழந்தை திரேஸ் அம்மாள் போட்டோ புஸ்தக படம், டஜன் அணா 11. ரூல்போட்ட எழுதும் காயிதம் பாக்ட் அணா 10. ரூல் இல்லாத பாக்ட் அணா 14. லெட்டர்பேப்பர் பாக்ட் அணா 14. என்விலோப் 100, அணா 12, 14, ரூ 1, 1 ¼. அச்சடிப்பதற்கு வேணடிய லெட் பிளாக்குகளும், ரப்பர்ஸ்டாம்புகளும், டைகளும், பிரின்டிங்களும், சுத்தமாய் செய்தனுப்பப்படும். பீட ஜோடினைக்குவேண்டிய பலவித புஷ்பகொத்துகளும் உத்தரியங்களும், அவரவர் ஆடர்பிரகாரம் டஜனாகவும், கிரோசாகவும் செய்தனுப்பப்படும். 10 ரூ சாமான் வரையில் V. P. அனுப்பப்படும். 10 ரூபாயிக்கு மேற்படும் சாமான்களுக்கு முன் பணம் அனுப்பினால் மாத்திரம் சமான் அனுப்பப்படும். பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம்.

Messrs. MAY & Co., Royapettah, Madras.

The Zemindar Cap

THE HEAD DRESS FOR THE GENTRY

ATTRACTIVE. UP-TO-DATE. DURABLE. CHEAP.

In all sizes.

Colours—Brown, Black & Blue-Black.

THE ZEMINDAR CAP is specially adapted for Indian requirements, and bids fair to become the popular Head Gear of Indian gentlemen.

Price Rs. 4-8.

Special rates for Large Quantities.

Shirt Specialists.

AGENTS WANTED FOR CAPS. Small Photos of—Holy Family, Sacred Heart of Jesus and Sacred Heart of Mary, **9 as.** per. dozen. **Rs. 4-8** per 100, used for prayer books, size 3×2 inches.

Also Suppliers of every useful article, wholesale & retail, at moderate rates. Price list on application.

Apply to :—HAIL & Co.,

MANUFACTURERS OF ZEMINDAR CAPS, BOOTS, SHOES, SANDELS & SHIRTS,

Royapettah, MADRAS.

☞ தேம்பாவணி விருத்தியுரை வேதுவாய் செலவாகிவிட்டமையால் "நல்ல ஆயன்"
கையொப்பக்காரர்களுக்கு மாத்திரம் குறைந்த விலையாகிய
3-ரூபாய்க்குக் கொடுக்கப்படும்.

திருக்குடும்பர் துணை.

தேம்பாவணி விருத்தியுரை.

இப்புத்தக மிருக்கும் ஒவ்வொரு வீட்டிலேயும் தேவாசீர் பெருகுமென்பது ஆன்றோர் வாக்கு. திருக்குடும்ப சரித்திரமென்னுந் தேம்பாவணி விருத்தியுரை முன் 5-ரூபாய்க்கு விற்கப்பட்டு இப்போது குறைந்த விலையாகிய 3-ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது அதிக சங்கைதங்கிய வரப்பிரசாத ஆர்ச்பிஷப்பெனும் அதிமேற்றிராணியாரான குசை கால்கன் ஆண்டவரவர்கள் உத்தரவினாலும் அநேககுருப்பிரசாதிகளின் அபிப்பிராயத்தாலும் நேர்த்தியான காகிதத்தில் ராயல் சயிசில் அர்ச்சிட்ட பெரிய புத்தகம். இன்னுங் கொஞ்சந்தா னிருக்கிறது. விலை ரூபா 3. பிறகு விலை அதிகமாகும். ஸ்நான யோசேப்பு சபா ரூ 0 12 0. கெட்டகுமாரன் கதை யென்னும் ஊதாரிப்பிள்ளை விலாசம் ரூ 0 14 0. சைவமகத்துவ திமிரபானு விவிலிய விரோதத்திககாரமெனும் பெர்போன தர்க்க புத்தகம் டை அதிமேற்றிராணியார் அநுமதிபெற்றது ரூ 2 0 0. ஆண்டவர் அம்மானை அணா 8.

எ. எப். சைமன். கமிஷன் எஜென்ட். மகா விகடதூதன் ஆபீஸ், ஜார்ஜ்டவுன், மதுராஸ்.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கததிலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாது சிரோன்மணிகளைப்பற்றிய இச் சரிதையானது 417-பக்கங்கள் அடங்கியது. இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12 அணா; இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1. சூசை கோவிந்தராவ், எஜண்டு, மதுரை.

LAGHIAM DEPOT.

No. 44, Nomboolyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும், அயக்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்ம ரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு, ஒடு வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசி யில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத வாதையைத்தரும்தந்தி மேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்தநரம்புகளையு மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை, யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாவளவும் துற்பலமே எற்படாது, இது சத்தியம். தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினுல் கட்டாயம் வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானுல் முழுதும் குணமாவார்கள். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளியிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித போய்யர்களாகிய வைத்திய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தப்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

உடனே எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே ஏஜண்டாய் நாடுவார்கள். இது உண்மை. அப்படி ஏஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்கு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம் பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும், எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது. மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷ பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச் செய்யுமென்பதில் தடையே யில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினாலுண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷ பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரத்திற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய் எடுக்கும். பச்சைப்பயறு கொழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு, நெய் இவை அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எருமைப்பால், பசும்பால், ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன் பெண்சாதி இருவர் ஏக காலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள் யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாணமாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப் பற்றி இன்னும் எழுதமுடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ 1—12—0.
போஸ்டேஜ் அணா 4.

ஒரே காலத்தில் 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு 100-ரூபாய் பரிசளிக்கப்படும்.

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானித் தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்கீலி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு வித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை :—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ 0 8 0
ஷ தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ 5 0 0
ஏக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம்.
வர்த்தகர்களுக்கு 100-க்கு 25 கமிஷன்.

எமது விலாசம் :— லேகியம் டிபோ,
நெ. 44, நம்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை, மதராஸ்.